ருமபுரம் ஆதீனம் வெளியீடு - 41

விஷு ௵ ஆவணி மூலம்
திருமுறைத் திருநாள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# நால்வர் சரித்திரமும்

## அற்புதத் தேவாரத் திரட்டும்



திருக்கைலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனம்
24-வது மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகள்
திருஅருளின்படி அச்சிடப்பெற்றது

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

1941



## சமயகுரவர் வணக்கம்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

(திருவருணைக் கலம்பகம் - சைவ எல்லப்ப நாவலர்)

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத் தேவார முந்திரு வாசகமு
முய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.

## சேக்கிழார் வணக்கம்

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
யொல்லையவர் புராணகதை யுலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.



திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம்

உசு-வது மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசார்ய சுவாமிகள்

சிவமயம்

# முகவுரை

**நால்வர் சரித்திரம்** என்னும் இவ்வரிய நூல் முதன் முதலாகத் தூத்துக்குடி - சைவ சித்தாந்த சபையினரால் இவ்வாண்டில் அச்சபையின் தலைவர் ஸ்ரீமான் சி.வ. நல்லபெருமாள் பிள்ளையவர்களுடைய அறுபதாவது ஆண்டு நிறைவின் நினைவுக்குறியாக வெளியிடப் பெற்றது. இவ்வெளியீட்டைக் கண்ணுற்ற திரிசிராப்பள்ளி மலைக் கோட்டை தருமபுர ஆதீனத்து மௌன மடம் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரானவர்கள் இதைத் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் மிகுதியாகப் பரவச்செய்தல் வேண்டுமென்ற விருப்பங்கொண்டு தமது குருமகா சந்நிதானத்துக்கு விண்ணப்பம் செய்தார்கள். பல புலவர்களை ஆதரித்தும், பல நூல்களை வெளியிட்டும், பல மகா நாடுகளைக் கூட்டுவித்தும், சைவ சமயத்தை வளர்த்து வரும் திருக்கைலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம் உச-வது மகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள் இந்நூலைப் பலருங் கற்றுப் பயனடைய வேண்டும் என்னும் பெருங்கருணை கொண்டு பதினாயிரம் பிரதிகள் அச்சிற் பதிக்கக் கருணை புரிந்தார்கள். இப்பெருங் கருணைச் செயலுக்குத் தமிழ் நாடும் சைவ உலகமும் எஞ்ஞான்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையன.

இந்நூல் மதுரை நாயகன் குதிரைச் சேவகனுகிப் பிட்டுநேர்பட மண்சுமந்து பிரம்படியும் பட்டு வாதவூரெங்கோனுக் கருள்புரிந்த ஆவணி மூலத் திருநாளாகிய இந்நன்னாளில் வெளியிடப் படுகின்றது. இவ்வெளியீடு சைவ மக்கட்கு நால்வர் வரலாற்றையும் அவர்கள் திருவாக்கின் பெருமையையும் நன்குணர்த்தி நல்வழிப்படுத்தி மெய்யன்பர்கட்கு இறவா இன்பப் பிறவா வாழ்க்கை யளிப்பதாக.

| | |
|---|---|
| தருமபுரம்<br>விஷு ௵ ஆவணிமீ ௨௬௨<br>ஆவணி மூலம்<br>திருமுறைத் திருநாள் | **ம. பாலசுப்பிரமணியன்**<br>காரியதரிசி<br>சைவ சித்தாந்த மகா சமாஜம் |

சிவமயம்

# உள்ளுறை

பக்கம்


| | | | | |
|---|---|---|---|---|
| திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரம் | ... | | ... | 1 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் | ,, | ... | ... | 19 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் | ,, | ... | ... | 31 |
| மாணிக்கவாசக சுவாமிகள் | ,, | ... | ... | 41 |
| அற்புதத் தேவாரத் திரட்டு | | ... | ... | 51 |
| திருவாசகம் | ,, | ... | ... | 67 |
| திருவிசைப்பா | ,, | ... | ... | 73 |
| திருப்பல்லாண்டு | ,, | ... | ... | 73 |
| திருமந்திரம் | ,, | ... | ... | 73 |
| பதினொராந் திருமுறை | ,, | ... | ... | 74 |
| பெரிய புராணம் | ,, | ... | ... | 75 |
| திருவையாற்றில் அவதரித்து அநுக்கிரகம் பெற்றுக் கைலை காவல் பூண்டொழுகும் திருநந்தி தேவர் (மரபு அகச்சந்தான முதற்குரவர்) பிரார்த்தனை 16 பேறு | | | ... | 76 |


*Copyright of pages 1 to 50 vests in the*
*Saiva Siddhantha Maha Samajam, Madras.*

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# நால்வர் சரித்திரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

வையம் மகிழ யாம்வாழ அமணர் வலிதொலைய
ஐயன் பிரம புரத்தரற் கம்மென் குதலைச்செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
தையல் அருள்பெற் றனனென்பர் ஞானசம் பந்தனையே.

பந்தார் விரலியர் வேள்செங்கட் சோழன் முருகன்நல்ல
சந்தார் அகலத்து நீலநக் கன்பெயர் தான்மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தி லிட்டடி யேன்கொடுத்த
அந்தாதி கொண்ட பிரான்அருட் காழியர் கொற்றவனே.

—**திருத்தொண்டர் திருவந்தாதி**

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

—**பெரியபுராணம்**

திருச்சிற்றம்பலம்

அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் முதலிய தலங்களையும், பொன்னம்பாலிக்கும் பொன்னியாகிய காவிரி முதலிய தீர்த்தங்களையும், முன்னங் காலனைக் காய்ந்து அடைக்கலம் புகுந்த அந்தணனுக்கருளிய அண்ணலாதிய மூர்த்திகளையும் உடையது சோழ வளநாடு. இந்நாட்டிற்கொரு திலகமாய் விளங்குவது பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரண்டு திருப்பெயர்களையுடைய சீகாழிப் பதியாகும். இவ்வூரிலே இப்போது கௌண்டிந்ய கோத்திரம் என்று வழங்கப்படுகிற கௌணிய கோத்திரத்திலே அவதரித்த சிவபாத இருதயர் என்ற அந்தணசீலர் பகவதி என்ற

பெண்மணியை மணந்து வேத நெறியிலும் மிகுசைவத் துறையிலும் வகுத்துள்ள ஒழுக்கத்தில் ஒரு சிறிதும் பிறழாது நின்று, இல்லறத்தைச் செவ்வையாய் நடத்தி வந்தனர். புத்திரப்பேறில்லாமையால், இருவரும் சிவபெருமானை நோக்கித் தவமிருந்து "இப்போது தமிழ்நாட்டில் வேரூன்றியிருக்கும் பௌத்தம், சமணம் என்ற புறப்புறச் சமயங்களை யொழித்துச் சைவத்தை நிலைநாட்டவல்ல சமயாசாரியார் தோன்றவேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். அவர்கள் தவத்துக்கு உவந்து இறைவன் அருள் சுரக்கவும், பகவதியார் கருப்பவதியாகி ஒவ்வொரு மதியிலும் நடைபெறவேண்டிய வேதவிதிச் சடங்குகள் நிறைவெய்திய பின்னர், பத்தாம் மாதத்திலே, திருவாதிரை நன்னாளிலே, நற்கோள்கள் உச்சத்திலிருக்கும் வேளையிலே ஒளி பொருந்திய அழகு மிக்க ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். இவ்வாண் குழந்தையே தேவாரத் திருமுறைகள் முதல் மூன்றையும் திருவாய் மலர்ந்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் ஆவார்.

சிவபாதவிருதயரும் பகவதியாரும் குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். குழந்தைக்குரிய வைதிகச் சடங்குகளையெல்லாம் முறைப்படி செய்து வைத்தார்கள். குழந்தைக்கு மூன்றுவது வயது நடந்து வரும்போது, அது ஒருநாள் தனது தகப்பனுரோடு திருக்கோயிலுக்குச் செல்லவேண்டுமென்று பிடிவாதமாய் அழுதது. தந்தையார் குழந்தையை அழைத்துச்சென்று குளக்கரையில் உட்காரவைத்துவிட்டுக் குளத்தில் இறங்கி அகமர்ஷண மந்திரத்தை ஓதிக்கொண்டே தண்ணீருள் மூழ்கி ஸ்நானம் செய்வாராயினுர். தமது தந்தையாரைக் காணுத குழந்தையார் பல திசைகளிலும் நோக்கியழுது கடைசியாகத் "தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும் பிள்ளைமை தானே" திருத்தோணியப்பர் கோயில் சிகரத்தைப்பார்த்து "அம்மே அப்பா" என்று அழத்தொடங்கினர். உடனே தோணியப்பர் தேவியாரோடு இடப வாகனத்தின் மேலேறி அழுகின்ற பிள்ளையின் முன் தோன்றிப் பொற் கிண்ணத்தில் திருமுலைப் பாலைக் கறந்து சிவஞானத்தைக் கலந்து ஊட்டும்படி பார்வதி தேவியாருக்குக் கட்டளை யிட்டார். தேவியாரும் அவ்வாறே செய்தனர். ஞானப்பாலை உண்டவுடனே "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கி

னில் ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்" எனப்பட்ட ஞானம் முழுமையும் கைவரப் பெற்ற குழந்தைக்குத் **திருஞான சம்பந்தர்** என்ற காரணப் பெயர் உண்டாயிற்று. ஞானப்பாலை ஊட்டிவிட்டு இறைவனும் இறைவியும் மறைந்து போயினர். குழந்தையும் அப்போது உண்ட பால் வடிந்த உதடுகளோடு குளக்கரையில் உட்கார்ந்திருந் தது. தந்தையார் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு கரையின் மேல் வந்து குழந்தையைக் கண்டு "உனக்குப் பால் கொடுத்தது யார்? வழிப்போக்கர் யாரோ கொடுத்த பாலை நீ ஏன் உண்டாய்?" என்று கோபத்தோடு ஒரு குச்சியை ஓங்கி அடிப் பவர் போல் கேட்டார். உடனே சிவஞானம் கைவரப் பெற்ற குழந்தை பால் கொடுத்தவர் இறைவனும் இறைவியுமே என்பதை யுணர்த்தித் தாம் நேரே கண்ட இடபவாகனரூட திவ்விய கோலத்தை அறிவுறுத்தித் "தோடுடைய செவியன்" என்ற திருப்பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளினர். உடனே சிவபாத விருதயர் தமது குழந்தை, சிவஞானம் பெற்ற தெய்வக் குழந்தை என்பதை யுணர்ந்தார். இருவரும் திருக்கோயிலில் சிவபெரு மான் சந்நிதிக்குச் சென்று வணங்கினர். கோயிலிலும் ஊரிலும் உள்ளார் அனைவரும் குழந்தை ஞானப்பாலுண்ட செய்தியை யறிந்து ஆநந்தத்தோடு திருஞானசம்பந்தரை ஊர்வலமாக இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர். தாம் ஞானப்பாலுண்ட செய்தியைத் திருஞானசம்பந்தர் சில ஆண்டுகள் கழித்துத் தாம் பாடிய "போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத், தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்" என்ற தேவாரப் பாடலிலும் கூறியுள்ள அகச்சான்று நமக்குக் கிடைத்திருக்கிறது.

சிலநாட் கழித்துச், சீகாழிக் கண்மையிலுள்ள திருக்கோலக் காவைத் தரிசிப்பதற்கு விரும்பிய தம்மைத் தந்தையார் தோளின் மேல் ஏற்றிச் செல்லத் திருஞானசம்பந்தர் திருக்கோயிலை யடைந்து கைகளால் தாளம் போட்டு "மடையில் வாளை" என்ற பதிகத்தை ஓதியருளினர். உடனே கண்ணுதல் வள்ளல் சுவாமிகட்குப் பஞ்சாக்கரம் வரையப்பெற்ற பொற்றாளங்க ளிரண்டை அசரீரியாகவிருந்து உதவினர். சுவாமிகள் அவை களைப் பெற்றுத் தமது தேவாரத் திருத்தொண்டுக்குப் பயன் படுத்திக் கொண்டார்.

திருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டு பொற்றாளம் பெற்ற செய்தியைக் கேட்ட சோழநாட்டு மக்கள் ஊர் ஊராகத் திரள் திரளாக வந்து சுவாமிகளைத் தரிசித்து மகிழ்ந்து தங்கள் தங்கள் ஊர்கட்கெல்லாம் வந்தருளும்படி வேண்டினார்கள். சுவாமிகளும் அவர்கள் வேண்டுகோளுக் கிணங்கித் தலயாத்திரைசெய்து தேவாரங்களை ஓதியருளினார். அவ்வாறு முதன் முதலாகச் சென்றவிடம் தமது தாயார் பிறந்த ஊராகிய திருநனிபள்ளி என்பதாகும்.

சிதம்பரத்துக் கருகேயுள்ள திருஎருக்கத்தம்புலியூரில் வசித்த திருநீலகண்டப் பெரும்பாணரும் அவர் மனைவி மதங்க சூளாமணியும் திருஞானசம்பந்தரைத் தரிசிக்கச் சீகாழி போந்தனர் ; சுவாமிகளைக் கண்டு மகிழ்வெய்தி, சுவாமிகள் தேவாரப் பதிகங்களைத் தங்கள் யாழில் அமைத்து வாசித்தனர். அவர்கள் சுவாமிகளோடு எல்லாவிடங்கட்கும் உடன் சென்று சுவாமிகள் பாடும் தேவாரப் பதிகங்களை யெல்லாம் அவ்வப்போது யாழி லமைத்துப் பாடும் வரத்தையும் பெற்றார்கள்.

திருஞானசம்பந்தர் சிதம்பரம் முதலிய பல தலங்களைத் தரிசித்துத் திருநெல்வாயிலரத்துறையைக் காண விரும்பித் தந்தையார் தோளினின்றும் இழிந்து நடந்து சென்றார். சற்று நேரங்கழித்துக் களைப்புற்று வழியிலுள்ள மாறன்பாடி என்ற ஊரில் ஐந்தெழுத்தோதி அயர்ந்தனர். அவ்விரவு இறைவன் திருநெல்வாயிலரத்துறை வாசிகளின் கனவில் தோன்றித், திருக் கோயிலில் முத்துச்சிவிகை, குடை, சின்னங்கள் வைத்திருப்ப தாகவும் அவற்றைச் சுவாமிகட்குச் சேர்ப்பிக்கும்படியாகவும் கட்டளையிட்டருளினார். சுவாமிகளுக்குங் கனவில் தோன்றி அவைகளை யேற்றுக்கொள்ளும்படி கட்டளையிட்டனர். விடியற் காலத்திலே திருநெல்வாயிலரத்துறை வாசிகள் கோயிலிற் சென்று முத்துச் சிவிகை குடை சின்னங்கள் மிளிர்வதைக்கண்டு வியந்து அவற்றைச் சுவாமிகளிடம் சமர்ப்பித்தார்கள். சுவாமி களும் "எந்தை யீசெனம் பெருமான்" என்ற பதிகம்பாடி ஐந்தெழுத்தோதிச், சிவிகையில் ஆரோகணித்தார். பரிவாரங்கள் குடை முதலிய சின்னங்களைத் தாங்கி நின்றனர். சுவாமிகள் பிறகு பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு சீகாழியடைந்தனர்.

பிறகு உபநயனப் பருவத்தில் திருஞானசம்பந்தருக்கு வேத விதிப்படி உபநயனச் சடங்கு நடந்தது. வேதங்களின் முடிந்த

பொருள்களை ஓதாதுணர்ந்த திருஞானசம்பந்தர் உபநயனச் சடங்குக்கு வந்திருந்த மறையோருக்குள்ள ஐயந்திரிபுகளை யெல்லாம் நீக்கி ஐந்தெழுத்தின் பெருமையை விளக்கித் "துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்" என்ற பஞ்சாக்கரப் பதிகத்தையும் ஓதியருளினர்.

திருஞானசம்பந்தர் வரலாற்றைக் கேள்விப்பட்ட திருநாவுக்கரசு சுவாமிகள் அவரைக் காண்பதற்கென்றே சீகாழிக்கு வந்தனர். சுவாமிகளும் அவரை எதிர்கொண்டழைத்து உபசரித்து இருவருமாகக் கோயிலைவணங்கிச் சிலநாள் இன்புற்றிருந்தனர். பிறகு திருநாவுக்கரசு சுவாமிகள் பல தலங்களைத் தரிசிக்கச் சென்றார். திருஞானசம்பந்தரும் சிவனடியார் புடைசூழப் பல பதிகளைத் தரிசித்துத் திருப்பாச்சிலாச்சிராமத்தை யடைந்தனர். ஆங்குள்ள கொல்லி மழவன் என்ற அரசன் சுவாமிகளை எதிர் கொண்டழைத்துக் கோயிலுக்குள் சிவசந்நிதானத்துக்குச் சென்றான். ஆங்கு முயலகன் என்னும் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டு அறிவற்று நிலத்தில் வீழ்ந்து கிடக்கும் தனது புத்திரியைக் காட்டி அவள் நோயைத் தீர்த்து அருள் புரியுமாறு சுவாமிகளை வேண்டினான். உடனே இறைவன்மீது "துணிவளர் திங்கள்" என்ற பதிகம்பாடித் திருஞானசம்பந்தர் அவள் நோயைத் தீர்த்தருளினர். பிறகு பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருக்கொடிமாடச் செங்குன்றூரை யடைந்தார். ஆங்கு முன்பனிக் காலத்தில் ஒருவகையான விஷச் சுரநோய் வருவது வழக்கம். சுவாமிகளோடு வந்த அடியார் குழாங்களையும் அவ்விஷச்சுர நோய் பிடித்துக் கொண்டது. இதை யறிந்த சுவாமிகள் "அவ்வினைக் கிவ்வினை" என்ற பதிகம்பாடி இறைவன் திருவருளால் அடியார் குழாங்களுக்குற்ற நோயைத் தீர்த்தது மட்டுமேயன்றி அவ்வூரிலும் எக்காலத்திலும் அவ்விஷச்சுரம் வரவொட்டாமல் திருவருள் புரிந்தனர்.

பிறகு பல தலங்களைத் தரிசித்துவிட்டுத், திருப்பட்டீச்சரத்தை யணையும்போது வெயில் மிகுந்ததால் நிழல் தருவதற்கு ஆகாயத்தில் சிவபூதம் ஒன்று முத்துப்பந்தர் ஒன்றைத் தாங்கிற்று. பிறகு அப்பந்தர் இழிந்தது. பரிசனங்கள் அதைத் தாங்கிக் கொண்டார்கள். சுவாமிகளும் தில்லை மூதூராடிய திருவடி நீழலெனவே அம்முத்துப் பந்தர் நிழலை யெண்ணித் திருகோயில் சென்று "பாடன்

மறைகூடன்" என்னும் பதிகம் பாடிப் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறையை அடைந்தனர்.

ஆங்குறையுநாளில் சிவபாதவிருதயர் வந்து வேள்வி செய்தற்குரிய காலம் வந்துவிட்டபடியால் பொருள் வேண்டுமென்று சுவாமிகளைக் கேட்டார். சுவாமிகளும் "அந்தமில் பொருளாவன ஆவடுதுறையுள் எந்தையார் அடித்தலங்க ளன்றே" என்ற கருத்துத்தோன்ற "இடரினுந் தளரினும்" என்ற திருப்பதிகத்தை ஓதினர். உடனே ஒரு சிவபூதம் தோன்றி அகன் பீடத்துச்சி வைத்தது பசும்பொன் ஆயிரங்கிழியொன்று. வைத்துவிட்டு முன்னின்று "நல்வாக்கால் உய்த்த இக்கிழி பொன்னுல வாக்கிழி யுமக்கு நித்தனர் அருள் செய்தது" எனக் கூறி மறைந்தது. அதைத் தந்தையாரிடம் கொடுத்து "**நல்வேள்வி நீது நீங்க** நீர்செய்யும்" என்றருளினர் திருமகனர்.

பிறகு பல தலங்களை வணங்கித் திருநீலகண்டத்துப் பாணனர் தாய் பிறந்த ஊராகிய தருமபுரத்தைத் திருஞானசம்பந்தர் அடைந்தார். அவ்வூரில் பாணனர் சுற்றத்தார் பாணனர் திருத்தொண்டை வியந்து "திருப்பதிகத்திற் கிளர்ந்த வோசை, அளவு பெறக் கருவியின் நீர் அமைத்தியற்றுவதனலே யகில மெல்லாம், வளர இசை நிகழ்வதென" விளம்பினர்கள். பாணனர் உளநடுங்கித் "திருப்பதிகஇசை யளவுபடா வகையை இவர்களும் உலகத்தவரும் அறியுமாறு ஒரு பதிகம் பாடவேண்டும்" என்று திருஞானசம்பந்தரை வேண்டச், சுவாமிகளும் "மாதர்மடப் பிடியும்" என்னும் யாழ்மூரிப் பதிகம் பாடினர். அப்பதிக இசை யாழில் அடங்காதது கண்ட பாணனர் யாழை உடைக்க ஓங்கினர். உடனே சுவாமிகள் அதனை வாங்கி "ஐயரே அம்மையப்பர் திருவருளின் பெருமை யெல்லாம் இக்கருவியினில் அளவு படுமோ ? இயன்ற வரையிலேயே வாசிப்பீர்" என்று மீண்டும் யாழைப் பாணனரிடம் தந்தார். அதைப் பெற்றுப் பாணனர் வழக்கம் போல் சுவாமிகட்கு யாழ்த்தொண்டு புரிந்திருந்தனர்.

இதன் பின்னர் பல தலங்களில் இறைவனை வணங்கிச், சுவாமிகள் திருமருகலையடைந்தார். ஆங்கு கோயிலுக்கெழுந்தருளும்போது ஓர் அழுகுரலோசை கேட்டது. தன்னை மணந்து கொள்ளக்கருதிய வணிகனுந் தானுமாக வர, வழியில் அவ் வணிகன் பாம்பு கடித்திறக்கத் திக்கற்றவளுக்குத் தெய்வமே துணையென்று ஒரு பெண் கதறியழுங் குரலோசை

அதுவென்பதை யறிந்த சுவாமிகள் "சடையா யெனுமால்" என்னும் பதிகம் பாடி விஷத்தை யிறக்கி அவ்வணிகனை உயிர்ப்பித்தனர். சுவாமிகளின் திருவடிகளில் இருவரும் வீழ்ந்து வணங்கவும், அவர்கட்குப் "புகலிவேந்தர், மணம் புணரும் பெருவாழ்வு வகுத்துவிட்டார்." பிறகு சிறுத்தொண்டநாயனர், முருகநாயனர் வேண்டுகோள்களுக்கிணங்கித் திருச்செங்காட்டங்குடியையும், திருப்புகலூரையும் தரிசித்து, ஆங்கு திருநாவுக்கரசு சுவாமிகளைக் கண்டு ஆரூர்த் திருவாதிரை விழாச் சிறப்பை அவர் கூறக்கேட்டுத் திருவாரூர்சென்று வணங்கிப், பின் சில தலங்கட்குச்சென்று திருவீழிமிழலையை அடைந்தார். ஆங்குள்ள சிவபெருமான் காழிநகர்த் தோணியப்பரைப்போல் காட்சிகொடுத்ததைக் கண்டு களித்து அவ்வூரிலேயே சிலகாலம் தாமும் நாவுக்கரையருமாகத் தங்கி யிருந்தார்கள். அப்போது பஞ்சக் கொடுமையால் அடியார் குழாங்கள் வருந்தக் கடவுள் கோயிலுள் இரண்டு பீடங்களில் தினந்தோறும் பஞ்சம் முடியுமளவும் ஒவ்வொரு பொற்காசு தந்து உதவினர். அக்காசுகளைப் பெற்றுத் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தனித்தனியே தங்கள் திருமடங்களிற் சிறப்பாக அடியவர்க்கு அமுதளித்து வந்தனர். தாம்பெற்ற காசுகள் வாசியின்றி (வட்டமில்லாமல்) மாறுததைக் கண்ட திருஞானசம்பந்தர் "வாசி தீரவே" என்ற பதிகம்பாடி நற்காசு பெற்றனர்.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரையரும் பலதலங்களைத் தரிசித்துக்கொண்டு திருமறைக்காட்டை யடைந்தார்கள். ஆங்குள்ள திருக்கோயிலின் கதவு மறைகளால் அடைக்கப்பட்டிருந்தது. அடியார்களெல்லாம் வேறொரு திட்டி வாசல் வழியாகவே செல்லும் வழக்கம் ஏற்பட்டது. இதைக்கண்ட இரு குரவருள் அப்பர் சுவாமிகள் திறக்கும்படி பாட, சம்பந்த சுவாமிகள் "சதுரம் மறைதான்" என்ற பதிகம்பாடி மூடவும் செய்தார். பிறகு அக்கதவு மற்றைக் கதவுகளைப்போல் திறக்கவும் மூடவும் இசைந்திருந்தது. இருவரும் திருமறைக்காட்டிலேயே சிலகாலம் வீற்றிருந்தார்கள்.

அப்போது ஒருநாள் பாண்டிநாட்டிலிருந்து சில அடியார்கள் வந்து திருஞானசம்பந்தரை வணங்கி "ஐயனே, எங்கள் நாட்டில் சைவம் மறைந்துவிட்டது, சமண சமயமே விளங்குகிறது, மன்னனும் அச்சமயத்திற் புகுந்து சைவத்துக்குக் கேடு விளைவிக்கிறுன், குலச்சிறையார் என்ற அமைச்சரும் மங்கையர்க்கரசியார்

என்ற பாண்டிமா தேவியாரும் உளம் புழுங்கிச் சைவத்துக்குற்ற குறையை நினைந்து நினைந்து வருந்துகிறார்கள், தங்கள் நல்வருகையை வேண்டுகிறார்கள், தாங்களே சமண சமயத்தைவென்று மீண்டும் சைவத்தை நிலைநாட்ட வல்லவர்கள் என்று திண்ணமாய் நம்புகிறார்கள், தாங்கள் பாண்டிநாட்டுக் கெழுந்தருளி எங்களைக் காத்தருளல் வேண்டும்" என்று மிகப் பணிவுடன் கூறினார்கள். இதைக்கேட்ட திருஞானசம்பந்தர் அவர்கட்கு அருள்புரிந்து வருவதாக ஒப்புக்கொண்டனர். இதையறிந்த நாவுக்கரையர் "நீவிர் சிறு பாலர், வயதுமுதிர்ந்த என்னையே எவ்வளவோ துன்புறுத்தியவர்கள் சமணர்கள், மேலும் இதுபோழ்து நாளும் கோளும் சரியாகவில்லை, போதல்கூடாது" என்று நட்புரிமைப்பற்றித் திருஞானசம்பந்தரைத் தடுத்தார். "திருவருள் வழிநிற்கும் சிவனடியவர்க்கு நாளும் கோளும் தீமை விளைக்கமாட்டா" என்று கூறி "வேயுறு தோளி பங்கன்" என்ற பதிகத்தைப் பாடி அப்பரிடம் விடைபெற்று மறைக்காட்டீசனை வணங்கிப் பல தலங்களை வழியிலே தரிசித்துத் திருஞானசம்பந்தர் பாண்டி நாடடைந்தார்.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மதுரைமா நகரத்தின் எல்லைக்கருகில் வருவதையறிந்த மங்கையர்க்கரசியார் சுவாமிகளை எதிர் கொண்டழைத்தற்காகக் குலச்சிறை நாயனார் என்னும் மந்திரியாரை அனுப்பி வைத்தார். மந்திரியாரும் சென்றழைத்தார். சுவாமிகள் திருவாலவாய் எப்புறமிருக்கிறதென்று வினவினார். கோபுரங்கள் சோலைகளிடையே தோன்றும் பக்கத்தைச் சுட்டினர் குலச்சிறையார். சுவாமிகளும் "மங்கையர்க்கரசி" என்னும் பதிகத்தைப்பாடித் திருவாலவாயைத் தொழுது உட்புகுந்து திருக்கோயில் சென்று வணங்கி, மங்கையர்க்கரசியாரையும் கண்டு மகிழ்ந்து ஒரு திருமடத்தில் பரிவாரங்களோடு தங்கியிருந்தனர். இராப்பொழுது தொடங்கியதும் சிவனடியார்கள் தமிழ்மறை முழக்கம் தொடங்கினர். அதனைக் கேட்கப் பொறாத சமண அடிகள்மாரெல்லாம் ஒருங்கு சேர்ந்து அரசனிடஞ்சென்று "மதுரையிற் சைவ வேதியர்தாம் மேவலாலின்று **கண்டு முட்டி**யாமென்று" விளம்பினர். "என்று கூறலுங் **கேட்டு முட்டி**யானு மென்றியம்பி" வேந்தன் மேலே செய்யவேண்டுவது யாதெனக் கேட்டனன். சமண அடிகள் அதற்கு "நம்மை வாதில் வெல்லவந்த இவன் தங்கியிருக்கும் மடத்துக்கு மந்திரத்தினால் தீயிடுவதே சாலும்" என்றனர். "அவ்வாறே விரைந்து

செய்யுங்கள்" என்றான் அரசன். சமணர்கள் ஓதிய மந்திராக்கினி பஞ்சாக்ஷரத்தின் முன் பயன்படவில்லை. திருமடம் தீப்பற்றவில்லை. இதை யறிந்த சமணர்கள் உடனே தீயை எடுத்துச் சென்று திருமடத்தின் ஒரு பக்கலில் இட்டார்கள். அப்பக்கம் தீப்பற்றி யெரிந்ததைக்கண்ட அடியவர் திருஞானசம்பந்தரிடம் முறையிட, சுவாமிகளும் "இந்தத் தீ அரசனை மெல்ல அடைந்து அவனுக்கு ஆக வேண்டியவைகளைச் செய்யட்டும்" என்று திருவுளங் கொண்டு "செய்யனே திருவாலவாய்" என்ற பதிகத்தை ஓதி யருளினார். உடனே திருமடத்திலிட்ட தீ அணைந்து, வெப்பு நோயாக மாறிப், பாண்டிய மன்னனைத் துன்புறுத்தத் தொடங்கிற்று.

அவ்வெப்பு நோய் தாங்கப் பொறாத அரசன் பல வைத்தியர்களையும் சமண மந்திர வாதிகளையும் கொண்டு சிகிச்சை செய்து கொண்டும் நோய் ஒரு சிறிதும் குறையாததை யுணர்ந்து தனது அரசியாரையும் மந்திரி குலச்சிறையாரையும் வரவழைத்து விசாரித்தான். திருஞானசம்பந்த சுவாமிகள் மடத்துக்கிட்ட தீயினால்தான் இவ்வெப்பு நோய் வந்ததென்றும், அந்தச் சுவாமிகளே இந்நோயைத் தீர்க்க வல்லாரென்றும் அவர்கள் கூறினார்கள். மன்னனும் ஆங்குக் கூடியிருந்த சமணர்களை நோக்கி "இவர் செய்கை யெல்லாம் இன்னவா றெய்து நோய்க்கே யேதுவாயின வென்றெண்ணி", "யானுற்ற பிணியைத் தீர்த்து வென்றவர் பக்கஞ் சார்வன்" என்று கூறித் திருஞானசம்பந்தரை அழைத்து வரும்படி மந்திரியாருக்குக் கட்டளை யிட்டான். உடனே குலச்சிறையார் திருமடம் சென்றழைத்தார். சுவாமிகள் கோயிலுக்குள் சென்று "காட்டுமாவ துரித்து", "வேதவேள்வியை நிந்தனை" என்ற பதிகங்களை ஓதி இறைவன் திருவுள்ளத்தை யறியவேண்டி நின்றார். உடனே "நாதர்தம் அருள்முன் பெற்று நாடிய மகிழ்ச்சி பொங்கப் போதுவார் பணிந்துபோற்றி விடைகொண்டு" திருநீற்றின் கோலத்தோடு அரண்மனை வாயிலை அடைந்தார். உடனே குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் சுவாமிகளை வரவேற்று அரசனிடம் அழைத்துச் சென்றார்கள். அரசனும் சுவாமிகளைக் கைகூப்பி வணங்கித் தன் தலைப்பக்கத்தில் ஒரு பொற்பீடத்திலிருக்கச் செய்தான். தங்கள் ஊர் எதுவென்று சுவாமிகளை அரசன் வினவச்

சுவாமிகள் "பிரமனூர் வேணுபுரம்" என்ற பதிகமோதி ஸ்ரீகாழியின் பன்னிரு பெயர்களையும் தெரிவித்தனர்.

சமணர்கள் வாதில்வெல்ல எண்ணிக் "கோலுநா லெடுத்தோதித் தலைதிமிர்ப்பக் குரைத்தார்கள்". சுவாமிகள் "பேசுதிர் நும்பொருளெல்லை யுள்ளவாறு" என்றார். உடனே சமணர்கள் "துள்ளியெழுந் தநேகராய்ச் சூழ்ந்து பதறிக் கதற", மங்கையர்க்கரசியார் இவ்விளம் பிள்ளையைத் துள்ளியெழும் குண்டர்கள் யாது செய்வார்களோவென்று அஞ்சினார். இது கண்ட சுவாமிகள் "மானினேர் விழி" என்ற பதிகம் பாடி அரசியாரைத் தேற்றினார். அரசனும் சமணர்களை நோக்கி "வேறுவா தென்கொல் என்மேல் வெப்பொழித்து", "நீங்கள் தேறிய தெய்வத் தன்மை யென்னிடைத் தெரிப்பீ ரென்றான்". சமணர்கள் அரசனது இடப்பக்கத்துள்ள வெப்பத்தை மந்திரத்தால் நீக்குவதாகக் கூறி, முயன்று தோற்றார்கள். உடனே அரசன் திருஞானசம்பந்தரை நோக்க, சுவாமிகள் இறைவனை நினைந்து "மந்திரமாவது நீறு" என்னும் திருப்பதிகத்தைப் பாடித் தமது கையால் மன்னன் வலது பக்கத்தில் திருநீறு பூசினார். உடனே வலதுபக்கத்திலிருந்த வெப்பம் நீங்கித் தடாகம்போல் குளிர்ந்தது. அவ்வெப்பம் இடதுபக்கம் சென்று இரட்டித்தது; அப்பக்கலில் நின்ற சமணர்களையும் அவர்கள் கையிலிருந்த மயிற்பீலிகளையும் சுட்டது. அரசன் அவர்களை நோக்கி "நீங்கள் தோற்றீர்கள், செல்லுங்கள்" என்று கூறிச், சுவாமிகளை நோக்கி வெப்பு முழுமையும் நீக்குமாறருள வேண்டினான். சுவாமிகளும் மற்றொருமுறை திருநீற்றைத்தடவி அவ்வெப்பு நோயை முழுமையும் போக்கினார். அரசன் சுவாமிகளை வணங்கினான். ஏசற்ற சமணர்கள் தீயில் நீரில் வெல்வதென் றெண்ணினார்கள். இதையறிந்த சுவாமிகள் "உங்கள் வாய்மை பேசுமின்கள்" என்று வாதுக்கழைத்தார். சமணர்கள் "தருக்கவாதம் வேண்டாம், கண்ணுக்குப் புலனாகும் வாதத்தால் வெல்வோம்" என்று கூறித் தத்தம் சமய வுண்மையை ஏட்டிலெழுதித் தீயிலிட்டு, பச்சென்றிருக்குமேடு வென்றதாகவும் எரிந்த ஏடு தோற்றதாகவும் கொள்வோமென்றார்கள். சுவாமிகளும் இதற்கு உடன்பட்டார்கள். உடனே தமது பதிகங்கள் எழுதப்பெற்ற ஏட்டுப் புத்தகத்தை யெடுத்துக் கயிறுசாற்றப் "போகமார்த்த பூண்முலையாள்" என்ற திருநள்ளாற்றுப் பதிகம் கிடைத்தது. அவ்வேட்டைக் கையிலெடுத்து நள்ளாறரை

நினைந்து வணங்கித் "தளிர்இள வளரொளி.....நள்ளாறர் நாமமே, மிளிர் இளவளர் **எரியிடிலிவை பழுதிலை** மெய்ம் மையே" என்ற பதிகத்தைப் பாடி அனைவரும் காணத் தீயிலிட்ட னர். அவ்வேடு வெந்தெரியாது பச்சையாய் விளங்கிற்று. சமணர் கள் தங்கள் பொருள் வரைந்த ஏட்டை உய்யுமோ என்ற அச்சமிகுதியோடு தீயிலிட்டார்கள். அது பஞ்சு தீயினிற்பட் டதுபோல் வெந்து சாம்பலாயிற்று. இதைக் கண்ட சமணர் கள் "இருமுறை போதாது, மூன்றும்முறை வாதுசெய்தல் வேண்டும்" என்றார்கள். சுவாமிகள் "இனி என்னவாது செய் வது" என்றார். "தத்தம் சமயவுண்மைகள் எழுதப் பெற்ற ஏடுகளை ஆற்றில் விட்டால், நீரோட்டத்தோடு ஓடுவது தோற் றது; நிற்பது வென்றது" என்றார்கள். சுவாமிகளும் "நன்று செய்வோ" மென்றனர். இதற்குள் குலச்சிறையார் "இம்முறை தோற்றாரை என்செய்வ" தென்றார். உடனே கோபமும் பொறாமையுங் கொண்ட சமணர்கள் "தங்கள்வாய் சோர்ந்து தாமே தனிவாதி லிழந்தோமாகில், வெங்கழு வேற்றுவானிவ் வேந்தனே" யென்று சொன்னார்கள். இதைக்கேட்ட மன்னன் "செற்றத்தா லுரைத்தீ ருங்கள் செய்கையு மறந்தீரென்று" கூறி, வைகை ஆற்றில் ஏடுகளை இடும்படி ஏவினன். சமணர் கள் "அத்தி நாத்தி" என்றெழுதிய ஏட்டை ஆற்றிலிட்டார்கள். உடனே அது ஆற்றோட்டத்தோடு விரைந்து கடலுக்குச் சென் றது. இதைக் கண்ட சமணர்கள் தங்கள் தோல்வியையும் அச்சத்தையும் மறைப்பார்போல் "உங்கள் ஏட்டையும் ஆற்றி லிட்டால்தானே தெரியும்" என்று திருஞானசம்பந்தரைக் கேட்டார்கள். சுவாமிகளும் "வாழ்க அந்தணர்" என்னும் பதிகத்தை ஓர் ஏட்டி லெழுதிக் கடவுளை நினைந்து ஆற்றி லிட்டார். அவ்வேடு "மருவுறும் பிறவி யாற்றில் மாதவர் மனம் சென்றாற்போல்" எதிர்த்து நீர்கிழித்துச் சென்றது. அதை யெடுப்பதற்குக் குலச்சிறையார் ஒரு குதிரை மீதேறி விரைந் தோடினார். சுவாமிகள் "வன்னியு மத்தமும்" என்ற பதிகம் பாடினார். ஓடுகின்ற ஏடு நின்று குலச்சிறையார் கையில் நட்டாற் றிற் கிடைத்தது. அவ்வேடு தங்கிய இடமே **திருவேடகம்** ஆயிற்று. குலச்சிறையார் அவ்வேட்டைக் கொண்டுவந்து அரசன் முதலானவர்கட்குக் காட்டினார். அரசனும் "முன்னமே பிள்ளை யார்பால் அனுசிதம் முற்றச்செய்த" சமணர்களை "அவர்கள்

ஒப்புக்கொண்டபடி கழுவிலேற்றி முறை செய்க" என்று மந்திரி யாருக்குக் கட்டளையிட்டான். இதைக்கேட்ட திருஞானசம்பந்தர் "இகலிலரெனினும் சைவரிருந்து வாழ் மடத்திற்றீங்கு, தகவிலாச் சமணர் செய்த தன்மையாற் சாலுமென்றே, மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடாதிருந்தார்". மடத்தில் தீவைத்த எண்ணாயிரம் சமணர்களும் கழுவேறினார்கள். திருஞானசம்பந்தர் கொடுக்க வாங்கி மன்னன் திருநீறணிந்தான், "வேந்தனும் ஓங்குக" என்ற அளவில் தன்கூன் நிமிர்ந்தான். நாட்டுள்ளார் அனைவரும் திருநீறிட்டுச் சைவராயினர். திருநீற்றின் விளக்கத்தால் அமணிருள் பாண்டிநாட்டில் மாய்ந்தது.

பிறகு திருஞானசம்பந்தர் பாண்டிநாட்டுத் தலங்களைத் தரிசித்துச் சோழநாடு போந்து, பல தலங்கள் சென்று, காவிரிக் கரையை யடைந்து எதிரேயுள்ள திருக்கொள்ளம்பூதூர் செல்வதற்கு ஓடமேறி ஓடம் விடுவாரின்றிக், "கொட்டமே கமழும்" என்னும் பதிகம் பாட ஓடம் தானகச் செல்ல, அக்கரை சென்று வணங்கிப் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு போதிமங்கை என்ற சமணர்கள் வாழூருக் கருகில் வந்தார். பரிவாரங்கள் அரன்நாமத்தை முழக்கினர். புத்த நந்தி என்பான் இதைப் பொருது வெகுண்டு எதிர்த்தான். உடனே சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளும் பதிகங்களை அவ்வப்போது ஏட்டிலெழுதும் அன்பர் (இவர் சுவாமிகளின் நல்லம்மானாகிய சம்பந்த சரணாலயர் என்று கூறுவது வழக்கு) "புத்தர் சமண கழுக்கையர்" என்ற பஞ்சாக்கரப் பதிகத்து அமண் பாட்டைப்பாடி இவன் தலையில் இடிவிழுகவென்ற அளவில் இடிவிழுந்து புத்தநந்தி இறந்தான். இவ்வன்பரே அங்குள்ள சமணர்களோடு வாதம் செய்தும் வென்றார்.

பிறகு பல தலங்களைத் தரிசித்து அப்பர் சுவாமிகளைக் காண வேண்டித், திருஞானசம்பந்தர் திருப்பூந்துருத்தியை யடைந்தார். அப்பர் சுவாமிகள் ஒருவருங் காணதபடி முத்துச் சிவிகையைத் தாங்குவோருடன் கலந்து தாங்கினார். சுவாமிகள் 'அப்பர் எங்கே?' யென வினவ, அப்பர் சுவாமிகளும் 'தங்கள் சிவிகையைத் தாங்கும் பாக்கியம் பெற்றிங் குற்றேன்' என்றார். உடனே பிள்ளையார் சிவிகையினின்றும் இழிந்தார். இருவரும் ஒருவரை யொருவர் வணங்கி மகிழ்ந்து சிலநாள் அங்கேயே தங்கியிருந்தனர். பாண்டி நாட்டுச் செய்திகளை யெல்லாம் அப்பர்

சுவாமிகள் திருஞானசம்பந்தரிடம் நேரிற் கேட்டறிந்தார். தாம் தொண்டைநாட்டுத் தலங்களைத் தரிசித்த செய்தியைத் தெரிவித்தார். பிறகு திருஞானசம்பந்தர் சில தலங்களைத் தரிசித்துத் தொண்டை நாட்டுக்குச் சென்றார்.

திருவோத்தூரில் ஒரு சிவனடியார் வைக்கும் பனை மரங்களெல்லாம் ஆண்பனைகளாகக் காயாது நிற்பதைக்கண்ட அமணர்கள் அவரை இகழ்ந்தார்கள். அவர் திருஞானசம்பந்தரிடம் சென்று வணங்கித் தமக் கருள்புரியுமாறு வேண்டினார். சுவாமிகள் "பூத்தேர்ந்தாயன" என்ற பதிகம் பாடி ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கினார். இதுகண்ட சமணர்கள் நாட்டைவிட்டகன்றனர். பிறகு பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு சுவாமிகள் திருக்காளத்தி சென்று வணங்கி ஆங்கிருந்தே கயிலாயம், கேதாரம், கோகர்ணம், இந்திரநீலபருப்பதம், அநேகதங்காபதம் என்ற தலங்களை நினைந்து பதிகம்பாடித் திருவேற்காடு, திருவலிதாயம் என்ற தலங்களை வணங்கித் திருவொற்றியூரடைந்து பதிகம் பாடி ஆங்கே தங்கியிருந்தார்.

திருமயிலாப்பூரில் சிவநேசர் என்ற பெருவணிகர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பூம்பாவையென்ற ஒரேபெண் இருந்தாள். மதுரையில் திருஞானசம்பந்தர் சமணரை வென்றசெய்தி முதலியவற்றைக் கேட்ட சிவநேசர் "எனது பெண்ணையும் பொருளையும் திருஞானசம்பந்தருக்கே அர்ப்பணம் செய்தேன்" என்றார். பூம்பாவை கன்னிமாடத்தில் பூக் கொய்யும்போது பாம்பு கடித்திறந்தாள். புகலியர்கோனுக்கர்ப்பணம் செய்யப்பெற்ற கன்னிகையை அன்னாரிடமே ஒப்புவிக்க வேண்டுமெனக் கருதிப் பூம்பாவைக்கு ஈமக்கடன் முடித்து எலும்புகளையும் சாம்பலையும் ஒரு குடத்தி லடைத்துக் கன்னிமாடத்தில் வைத்துப் பூசித்துத் திருஞானசம்பந்தர் வருகையைச் சிவநேசர் எதிர்நோக்கி யிருந்தார். சுவாமிகள் திருவொற்றியூரடைந்ததைத் தெரிந்து "திருவொற்றியூரளவுந் துன்னுநீள் நடைக்காவணந் துகில் விதானித்து" இன்னும் பலவகையில் ஊரை அலங்கரித்துத் திருஞானசம்பந்தரைச் சிவநேசர் அழைத்து வந்தார். திருமயிலாப்பூரை யடைந்து சுவாமிகள் திருக்கோயிலை வணங்கி இறைவன் திருமுன்பு நின்று என்புக் குடத்தைத் திருமதிற்புறவாயிலிற் கொண்டுவருமாறு சிவநேசருக்குக் கட்டளையிட்டார். குடமும் அவ்வாறே கொண்டுவந்து வைக்கப்பட்டது. உடனே

திருஞானசம்பந்தர் இறைவன் திருவருளை நினைந்து "மட்டிட்ட புன்னை" என்னும் பதிகத்தைப் பாடத் தொடங்கினார். அப்பதிகத்தில் "போதியோ வென்னும் அன்னமெய்த் திருவாக்கெனும் அமுதம் அவ்வங்கம், துன்னவந்து வந்துருவமாய்த் தொக்கதக் குடத்துள்." சுவாமிகள் சமண்பாட்டைப்பாடும்போது "கோற்றொடிச் செங்கை தோன்றிடக் குடமுடைந்து" எழுந்தாள் அங்கம்பூம்பாவை. பின்னர் சுவாமிகள் திருக்கடைக்காப்பையும் பாடியருளினார். இவ்வதிசயத்தைக் கண்டோரனைவரும் இறைவன் திருவருளை வியந்தனர். புறச்சமயத்தினர் கண்டு நடுங்கினர். தமக்கென்றே அர்ப்பணஞ் செய்யப்பெற்ற பூம்பாவையை மணந்து கொள்ளுமாறு திருஞானசம்பந்தரைச் சிவநேசர் வேண்டினார். "மற்றவர் தமக்கு வண்புகலி வாணர் நீர், பெற்றபெண் விடத்தினால் விந்த பின்னையான் கற்றைவார் சடையவர் கருணை காண்வர, உற்பவித்தலா லுரைதகாதென" மொழிந்தார். "அவ்வாறாயின் தங்களுக்கென்றர்ப்பணஞ் செய்த பாவையை மற்றெவர்க்கும் மணஞ்செய்வியேன்" என்று அங்கம்பூம்பாவையைக் கன்னிமாடத்திலேயே அமர்த்தினார் அவர் தந்தை. பூம்பாவையும் சிவத்தை மேவினாள்.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமயிலாப்பூரிலிருந்து திருவான்மியூர் முதலிய பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு சீகாழியை யடைந்தார். ஆங்கு, சிவபாதவிருதயரும் அவர் உறவினரும் திருஞானசம்பந்தருக்குத் திருமணம் முடிக்கவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். சுவாமிகள் இசையாது மறுத்தார். மீண்டும் அவர்கள் "வேதநெறியை நிலைநாட்ட வந்த தேவரீர் வேள்விக்குத் துணை புரியும்பொருட்டு ஒரு கன்னிகையை மணந்தருளல் வேண்டும்" என்று பணிவுடன் வேண்டினர். சுவாமிகள் அவ்வேண்டுகோளுக் கிணங்கினார். திருநல்லூர்ப் பெருமணத்தில் (இதுவே ஆச்சாபுரம்) வாழும் நம்பாண்டார் நம்பியின் திருமகளைப் பேசி முடித்துத் திருமணத்துக்குரிய ஏற்பாடுகளையும் அவ்வூரிலேயே செய்து முடித்தார்கள். திருநீலநக்க நாயனார் வேதவிதிப்படி திருமணவினைச் சடங்குகளைச்செய்தனர். மங்கல வாழ்த்தொலி முழங்கத் திருஞானசம்பந்தர் காதலியைக் கைப்பற்றினர். அக்கினியை வலம் வரும்போது அக்கினியாவார் சிவபெருமானே என்றெண்ணி "இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே இவள் தன்னோடும், அந்தமில் சிவன்தாள் சேர்வன்

என்னும் ஆதரவு பொங்க"ச் சுற்றத்தாரும் தொண்டர் குழாங்களும் புடைசூழத் திருக்கோயிலை யடைந்தார். "கல்லூர்ப்பெருமணம்" என்ற பதிகத்தை ஓதினர். உடனே சிவபெருமான் "காதலியும் நீவிரும் திருமணங் காணவந்தா ரனைவரும் நம்பாற் சோதியிற் கலமின்" என்று திருவருள் செய்து திருக்கோயில் முழுமையும் அனைவரும் செல்லும்வரை சோதி மயமாக்கி அதில் ஒரு வழியையும் வகுத்தருளினர். சுவாமிகள் "காதலாகிக் கசிந்து" என்ற நமச்சிவாயப் பதிகத்தையோதி அனைவரையும் சோதியுட் செல்லும்படி கட்டளையிட்டார். உடனே திருநீலநக்கர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், முருகநாயனர், சிவபாத விருதயர், நம்பாண்டார்நம்பி முதலிய அனைவரும் சோதியிற் கலந்தார்கள். எல்லாரும் புகுந்த பின்னர், வைகாசி மூல நன்னாளிலே,

" காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலங் கொண்டருளித்
தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியத னுட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி யுடனானர் "

திருச்சிற்றம்பலம்

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோன் அழுதுமையாள் கருதி யூட்டும்
ஏழிசையின் அமுதுண்டு தாளம் வாங்கி
இலங்கியநித் திலச்சிவிகை இசைய வேறி
வாழுமுய லகனகற்றிப் பந்த ரேய்ந்து
வளர்கிழிபெற் றரவின்விடம் மருகல் தீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கத வம்பிணித்து
மீனவன்மே னியின்வெப்பு விடுவித் தாரே.

ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன் னேற்றி
ஆற்றிவிடும் ஏடெதிர்போ யணைய வேற்றி
ஓரமண.ரொழியாமே கழுவி லேற்றி
ஓதுதிருப் பதிகத்தால் ஓட மேற்றிக்
காருதவும் இடிபுத்தன் தலையி லேற்றிக்
காயாத பனையின்முது கனிக ளேற்றி
ஈரமிலா அங்கமுயி ரெய்த வேற்றி
இலங்குபெரு மணத்தரனை யெய்தி னாரே.

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைப் பற்றிய
## சில குறிப்புகள்

(க) **சுவாமிகள் திருப்பெயர்கள்** :— (1) பிறந்த ஊர்பற்றிக் காழிமன்னன், புகலியர்கோன், வெங்குரு வேந்தன், தோணிபுரத் தோன்றல் முதலியனவும் (2) கோத்திரம்பற்றிக் கவுணியர்தங் குலதீபம் முதலியனவும் (3) ஞானப்பாலுண்டமை பற்றித் திருஞானசம்பந்தர், ஞானபோனகர், பாலறுவாயர் முதலியனவும் (4) பார்வதி தேவியார் குழந்தைக்குப் பால் தந்தமையாலும் சிவபெருமான் குமாரனாக எண்ணிப் பல திருவருள்கள் புரிந்தமையாலும் ஆளுடையபிள்ளையார், புரமெரித்தார் திருமகனார், தெய்வ ஞானக்கன்று முதலியனவும் (5) புறச்சமயிகளை வென்றமையால் பரசமய கோளரி முதலியனவும் (6) மறைநெறிச் சைவத்தை நிலைநாட்டினமையால் மாமறைச் சிறுவர், சைவ மைந்தர் முதலியனவும் (7) செந்தமிழ்மறை யோதினமையால் முத்தமிழ் விரகர் முதலியனவும் பிறவும் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளின் சிறப்புப் பெயர்களாகும்.

(உ) **சுவாமிகள் காலம்** :—பல கல்வெட்டு முதலிய சரித்திரச் சான்றுகளின் துணைகொண்டு சுவாமிகளின் காலம் (கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி (கி. பி. 601 - 650) யிலுள்ளதென ஆராய்ச்சியாளர்கள் முடிபு கூறுகின்றனர்.

(ங) **சுவாமிகள் வயது** :—ஈரமிலா அங்கமுயிர் எய்தவேற்றிய இறைவன் கருணையைச் சுவாமிகள் வியந்ததைப் " புண்ணியப் பதினாறாண்டு பேர்பெறும் புகலிவேந்தர், கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரமுகத்தாற் கண்டார் " எனச் சேக்கிழார் கூறுகிறார். அங்கம்பூம்பாவை அற்புதம் நிகழ்ந்தவுடன் சுவாமிகள் சீகாழி சென்று திருமணம் புரிந்துகொண்டு சோதியிற் கலந்ததே நிகழ்ந்ததால் சுவாமிகளின் வயது பதினாறென்றே துணியப்படும்.

(ச) **சுவாமிகள் தேவாரத் தொகை** :—இது பதினாறாயிரம் பதிகமென நம்பியாண்டார்நம்பி கூறுகின்றார். இப்போதுள்ளவை சமீபத்தில் கல்வெட்டொன்றிற் காணப்பட்ட திருவிடைவாய்ப் பதிகத்தையும் சேர்த்து ஙஅச.

(ரு) **சுவாமிகள் தேவாரத்திற் கூறியுள்ள செம்பொருள்** :—சைவ சித்தாந்த சமயத்திலுள்ள சிறந்த கொள்கைகளனைத்தையும் சுவாமிகள் தேவாரத்திற் காணலாகும். விரிக்கில் மிகப்

பெருகும். சுருங்கக்கூறின் புறக்கண் கொண்டு நோக்குவார்க்குப் பல சரிதச் சான்றுகள், இயற்கை வனப்பு, இசை நுட்பம், நாட்டின் நிலை, மக்கள் நிலை, பழக்க ஒழுக்கங்கள், செய்யுள் நயம், அகத்துறைப் பாடலினிமை முதலிய பொருள்களும் அகக்கண் கொண்டு நோக்குவார்க்கு இறைவன் திருவருள் நெறியென்ற செம்பொருளும் காணப்படும்.

(சு) **சுவாமிகள் அவதார புருஷரா?** :— முருகப்பெருமான் திருவவதாரமாகத் திருஞானசம்பந்தரைக் கொள்வது ஒருவகை வழக்கு. அருணகிரிநாதர் பாடல்கள் பல இவ்வழக்கை விளக்குகின்றன. "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்ற உண்மைச் சைவக் கொள்கையுடையோர் இராமன் கண்ணன் அவதாரங்களைப்போல் முருகன் கருப்பையிற் கிடந்து அவதரித்ததாக ஒப்புக்கொள்ளார், உபசாரமாகவே கொள்வர்.

(எ) **சுவாமிகள் காலத்தும் முன்னும் இருந்த நாயன்மார்கள்** :—அறுபத்துமூன்று நாயன்மார்களுள் சண்டீசர், கண்ணப்பர், நமிநந்தியடிகள், கோச்செங்கட்சோழர், முருகநாயனர், சிறுத்தொண்டர், நீலநக்கர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆகிய பதின்மரைப்பற்றித் தமது தேவாரத்திலேயே சுவாமிகள் பாடியுள்ளார்கள். இவர்களுள் பின்னர் கூறப்பட்ட அறுவரும் சுவாமிகளைக் கண்டு அவரோடிருந்து அளவளாவிய சிலர்கள். இவ்வறுவரே யன்றித் திருநாவுக்கரசு சுவாமிகளும், குங்குலியக்கலயரும், நின்றசீர் நெடுமாறரும் சுவாமிகளைக் கண்டு இன்புற்றவர்களாவார்கள்.

(அ) **சுவாமிகள் சமய குரவராவார்** :—சுவாமிகள் பாண்டி நாட்டில் சமணரை வென்று சைவத்தை நிலைநாட்டாவிடில் "நீறெங்கே மாமறை நூல்தானெங்கே எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே" என்ற வினக்களுக்கு இல்லையென்ற விடையே பகர வேண்டியிருக்கும். எனவே, சுவாமிகள் நம் சமயத்துக்குக் காலத்தாற் செய்த உதவி ஞாலத்தின் மாணப்பெரிதே யாகும். மேலும் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத்தில் சைவ சமயக் கொள்கை நுட்பங்களையெல்லாம் ஒருங்கே காணலாகும். ஆகையால் சுவாமிகளைச் சைவ சமயாசாரியுர்கள் நால்வரில் ஒருவராகக் கொள்வது ஆன்றோர் முடிபு.

(௯) **சுவாமிகள் நால்வருள் யாவர்?**:—சைவ சமயத்தில் இறைவன் திருவருளையடைவதற்கு நான்குசாதனங்கள் கூறப்பட்டுள்ளன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம்என்பனவாகும். இவற்றையே தாச மார்க்கம், சத்புத்ர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பர் வடமொழியாளர். இவற்றுள் திருஞான சம்பந்தர் கிரியையென்ற சத்புத்ர மார்க்கத்தை வற்புறுத்தும் சமய குரவர். அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற ஏனைய மூன்று சமய குரவரும் முறையே சரியை, யோகம், ஞானம் என்ற சாதனங்களை வற்புறுத்தும் சிறப்பினர் என்பது திருமுறை ஆராய்ச்சியாளர் துணிபு.

(௧0) **சுவாமிகள் வரலாறுகளும் புகழ்மாலைகளும்**:—திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரங்களில் சில குறிப்புக்களும், நம்பியாண்டார் நம்பிகளியற்றிய புகழ்மாலைகளும், சேக்கிழார் இயற்றிய பெரியபுராணமும், பிற்காலத்தவர் இயற்றிய புராண சாரமும், பிள்ளைத்தமிழ் முதலிய பலவும் சுவாமிகளைப்பற்றிய வரலாறுகளும் புகழ்மாலைகளுமாகும். சில ஆண்டுகளுக்கு முன்னர் திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை யவர்களியற்றிய சரித்திரமும் திரு. சே. சிவஞானம் பிள்ளை யவர்களியற்றிய சரித்திரமும் ஆராய்ச்சிக் குறிப்புகள் பலவும் மிகச் செவ்வையாக எழுதப்பட்டனவாகும்.

இச்சரிதமும் குறிப்புகளும் சைவ சித்தாந்த மகா சமாஜக் காரியதரிசியும், சென்னை உயர்தர நீதிமன்ற வழக்கறிஞருமாகிய திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல். அவர்களால் எழுதப்பெற்றன.

# திருநாவுக்கரசு சுவாமிகள்

நற்றவன் நல்லூர்ச் சிவன்திருப் பாதந்தன் சென்னிவைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற வீரட்டர் பெய்கழற்குள்
உற்றவன் உற்ற விடமடை யாரிட ஒள்ளமுதாத்
துற்றவன் ஆமூரின் நாவுக் கரசெனுந் தூமணியே.

மணியினை மாமறைக் காட்டு மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கத வந்திறப் பித்தன தெண்கடலிற்
பிணியன கல்மிதப் பித்தன சைவப் பெருநெறிக்கே
அணியன நாவுக் கரையர்பி ரான்தன் அருந்தமிழே.

—திருத்தொண்டர் திருவந்தாதி

இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்
உழவா ரத்திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே
பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப் பாடல்
தொடையறாச் செவ்வாயும் திருவேடப் பொலிவழகும்
துதித்து வாழ்வாம்.

—சிவஞான சுவாமிகள்

திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் நால்வரும் சைவ சமய ஆசாரியர்கள் ஆவார்கள். அவர்கள் அனைவரும் சிவபெருமானைத் தம் அனுபவத்தில் நேரே கண்டு பேரின்பப் பெருவாழ்வெய்திய சிவஞானிகள். ஆயினும் இறைவன் திருவுள்ளமிருந்தபடி, அவனை அடையும் மார்க்கங்களில் ஒவ்வொன்று ஒவ்வொருவர் வாயிலாக உலகில் சிறப்பு வகையில் விளங்குவதாயிற்று. இப்பெருமக்கள் சரித்திரங்களை உற்று நோக்கினால், தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்னும் நான்கு மார்க்கங்களும் முறையே, திருநாவுக்கரசு நாயனார் முதலிய நால்வர் வாழ்க்கையாலும் விளக்கப்பெறும் உண்மை புலனாகும். இவர்களுள் திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் கி. பி. 7-ம் நூற்றாண்டில் திகழ்ந்தவர்கள். அவர்கள் காலத்தில் நடுநாட்டையும் தொண்டை நாட்டையும் முதலாம் **மகேந்திரன்** என்னும் பல்லவ அரசன் ஆண்டு வந்தான். **(கி. பி. 600-630)** அந்நாளில் நிலைதிரிந்த

சமணமும் புத்தமும் தமிழ் நாட்டின் பல பாகங்களிற் பரவிச் சைவ சமயத்தை நலிவுறுத்திக் கொண்டிருந்தன. அவற்ருல் விளைந்த பெருங்கேட்டினின்றும் சைவ சமயத்தைக் காப்பாற்றி அருளிய பெருமை இவ்விருவருடையதாகும்.

இவர்களுள் திருநாவுக்கரசு நாயனுர், தமிழகத்தில் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில், சைவ வேளாளர் மரபில் குறுக்கையர் குடியில், கி. பி. ஆரும் நூற்ருண்டின் பிற்பாதியில் திருவவதாரஞ் செய்தார். அவர் தந்தையார் பெயர் **புகழனர்** ; தாயார் பெயர் **மாதினியார்.** இவர்கள் அவருக்கிட்ட பெயர் **மருள்நீக்கியார்** என்பது. அவருக்குத் **திலகவதியார்** என்னும் அருமைத் தமக்கையா ரொருவருண்டு. இவ்வம்மையாருக்குப் பன்னிரண்டாண்டான பின், இவரைச் சிவபக்தியிற் சிறந்த கலிப்பகையார் என்னும் சேனுதிபதி ஒருவருக்கு மணஞ்செய்விக்க அவ்விரு குடும்பத்துப் பெரியோரும் இசைந்திருந்தார்கள். அச்சமயத்தில் கலிப்பகையார் போர்மேற் செல்ல நேர்ந்தது. அதில் அவர் பூதவுடம்பை விடுத்துப் புகழுடம்பைப் பெற்ருர். அதற்குள் திருவாமூரிலே புகழனரும் சிவபதமடைந்தார். கற்பின் மேம்பட்ட அவர் மனைவியாரும் தம்முயிரை அவருயிரோடு சேர்க்க விரும்பி உடன் கட்டை யேறிவிட்டார்.

தமக்குத் திருமணவினை யின்னும் நடவாவிடினும், கலிப்பகையாரைத் தமது கணவனுரெனத் தம்மனதில் நினைந்துவிட்டவொன்றையே காரணமாகக்கொண்டு, திலகவதியார் தம் தாயாரைப்போன்றே தாமும் உயிர் துறக்கத் துணிந்தார். அவ்வாறு செய்தால் தம்பியார் தம்முயிரையும் போக்கிக் கொள்வதாகக் கூறிய உறுதியை உணர்ந்து, அவர் பொருட்டாகத் திலகவதியார் உயிர் தாங்கி இல்லத்திலேயே தவவொழுக்கம் பூண்டு, தம்மையே தாயுந் தந்தையுமாகக் கருதி நின்ற தம்பியாரைக் கல்வி யறிவொழுக்கங்களிற் சிறந்தவ ராக்கினுர்.

மருணீக்கியார் தம் கல்வியின் பயனுக உலக நிலையாமையை நன்குணர்ந்து பலவித தருமங்களைச் செய்துவிட்டுத் துறவு பூண்டார். அதனேடு, அக்காலத்தில் பரவியிருந்த சமண சமயத்தின் உண்மையை அறிய விரும்பிப் பாடலிபுத்திரத்திற்குச் சென்று, அங்குள்ள சமணக் குருமார்களது போதனைக்குள்ளாகி, அச்சமயத்தை மேற்கொண்டார். அவர் சமண சாத்திர அறிவி

லும் ஒழுக்கத்திலும் மேம்பட்டுப் புத்தர்களை வாதத்தில்வென்று சமணத்தை விளக்கிய காரணத்தால் அவருக்குத் **தருமசேனர்** என்னும் பட்டம் தரப்பட்டது.

இப்படித் தம்பியார் சைவம்விட்டுச் சமணம் சார்ந்ததை யறிந்த திலகவதியார் சிந்தை நொந்து, திருவதிகைப் பதியை யடைந்து, அங்கு வீரட்டானேச்சுரத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்து வருவாராயினர். அப்படிச்செய்து வருகையில் ஒருநாள் தம்பியார் சமணராய்க் கிடப்பதை நினைந்து மிக வருந்தி, அவரை அதினின்றும் மீட்டுக் காத்தருள வேண்டுமென்று வீரட்டானேச்சுரரைப் பன்முறையும் வேண்டினர். ஈசர் அவ்வம்மையார் கனவில்தோன்றி தருமசேனரைச் சூலைநோயால் வருத்தி ஆண்டருளுவதாக உணர்த்தினர். இறைவன் "வேண்டுவார் வேண்டுவதே ஈவான்" என்பது ஓர் அருள் வாக்கன்றோ?

அவ்வாறே தருமசேனரைத் தடுப்பரியதொரு சூலைநோய் தொடர்ந்து முடுக்கியது. முயற்சியொன்றும் பயன் தாராமையால் சமணர்கள் அவரைக் கைவிட்டு நீங்கினர்கள். பின்பு அவர் தம் நிலையைத் திலகவதியாருக் கறிவித்து அழைத்துவரும்படி சமயற்காரனை அனுப்பினர். நன்மையறியாச் சமணர் வாழிடத்துத் தாம் வரமுடியாதென்று அம்மையார் மறுத்துச் சொல்லி விட்டார். பின்பு தருமசேனர் கைதரும் ஆள் துணைக்கொண்டு, இரவில் திருவதிகையை யடைந்து தமக்கையார் திருவடிபணிந்து, தாம் உய்யுமாறு அருளிச் செய்யும்படி வேண்டினர். திலகவதியாரும், 'அடியடைந்தோர் பற்றறுப்பானாகிய பரமசிவனைப் பணிந்து அவன் பணி செய்தலே உய்யுநெறி' என்று உபதேசித்தார்கள். அதை ஏற்றுக்கொண்டு வணங்கினர் தம்பியார். திலகவதியார், இறைவன் பேரருளை நினைந்து, மருணீக்கியார் திருவீரட்டானத்துட் செல்லவேண்டி யிருப்பது கருதிச், சிவபெருமான் 'திருநீற்றை ஐந்தெழுத்தோதிக் கொடுத்தார்'. ஆர்வத்தோடதை ஏற்று அணிந்துகொண்ட தம்பியார், தமக்கையாரைப் பின் தொடர்ந்து சென்று வீரட்டானேச்சுரரை வணங்கி நின்ற அளவில், அப்பெருமான் திருவருளால் தமிழ்மாலை சாத்துமுணர்வு தோன்றியது. தோன்றவே, அவர் "கூற்றாயினவாறு" என்னும் திருப்பதிகத்தைப் பாடிப் பரவசரானர். சூலைநோய் நீங்கியது. 'செந்தமிழில் சொல் வளப்பம் மிக்க பதிகம் பாடினமையால்,

**நாவுக்கரசு** என்னும் நற்பெயர் நினக்கு எங்கும் வழங்குவ தாக' என்று ஓர் அசரீரி பிறந்தது. உடன் பிறந்தாரிருவரும் உற்ற மகிழ்ச்சிக்கு அளவில்லை. சிவபெருமானுக்கு மனம் வாக்குக் காயம் மூன்றாலும் தொண்டுபுரிய உறுதிகொண்ட **திரு நாவுக்கரசர்,** திருநீறுங் கண்டிகையும் சிறக்க அணிந்து, சிவன் சேவடி மறவாச் சிந்தையராய் உழவாரப்படையும் தாங்கி உலாவு வாராயினர். சைவ சமயத்தினின்றும் புறச்சமயம் புக்க தம்பி யாரை மீண்டும் சைவத்திற் சேர்க்க விரும்பிய தமக்கையார் அன்போடு திருநீற்றைத் திருஐந்தெழுத்தோதிக் கொடுத்ததே யன்றிப் பிறிதொரு பிராயச்சித்தமும் செய்யவில்லை. இறைவனும் உலகமும் அவருக்கு அஃதே சாலும் என்று அங்கீகரித்துக் கொண்ட இப்பெரிய உண்மை இங்கே குறிக்கற்பாலது.

இவற்றையெல்லாம் அறிந்த பாடலிபுத்திரத்துச் சமணர்கள் தம் சமயத்திற்குக் கேடு வந்ததென்று திகில்கொண்டு, தம்மரச னாகிய மகேந்திர பல்லவனிடஞ் சென்று, 'தருமசேனர் தம் தமக் கையார் நெறியையே அடைய விரும்பி, சூலைநோய் வந்ததாகப் பொய்ச் சாக்குக் காட்டிச்சென்று சைவராகி நம் சமணத்தை நிந்திக்கின்றார். ஆதலால் அவரைத் துன்புறுத்த வேண்டும்' என்றார்கள். அகற்கிணங்கிய மன்னனும், நாவுக்கரசரைஅழைத்து வருமாறு அமைச்சர்கட்குக் கட்டளை யிட்டான். அவர்களும் சேனைகளுடன் அதிகைசென்று அவரைக்கண்டு அரசனாணையைத் தெரிவித்தார்கள். அதுகேட்ட சுவாமிகள் "நாமார்க்கும் குடி யல்லோம்" என்னும் அரும்பெரும் திருத்தாண்டகத்தைப் பதி லாய் அளித்தார்கள். பின்பு மந்திரிகள் அவரை வருமாறு வணங்கிப் பெரிதும் வேண்டினர். திருவருளை நம்பித் திருநாவுக் கரசர் பாடலிபுத்திரத்தில் மகேந்திரன் சபையை யடைந்தார்.

கொல்லா விரதமே தம் சமயத்தின் சிறந்த கோட்பாடென வறிதே கூறும் அமணர்கள் அறிவுறுத்தியபடி அரசன் திருநாவுக் கரசரை நீற்றறையிலிடுவித்தான். இட்டும் அவர் இறைவன் திரு வடியையே தமது பற்றாகக்கொண்டு "மாசில் வீணையும்" என் னும் பதிகம்பாடித் தியானத்தி லினிதிருந்தார். ஏழுநாள் கழிந்த பின் நீற்றறைக்கதவைத் திறந்துபார்க்க, அவர் ஒருநமுமில்லாமல் ஆனந்த வடிவினராய்த் திகழ்ந்ததை அரசன் முதலியோர் கண் டார்கள். கண்டும், அவருண்மை நிலையை அறியமாட்டாது, சமண அடிகள்மார் அவருக்கு நஞ்சு ஊட்டவேண்டி அரசனுக்கு

ஆலோசனை கூறினர். அப்படியே வஞ்சனைப் பால்சோறுக்கி நஞ்சு தந்தனர். கிரேக்கநாட்டுச் சாக்கிரடீஸ் என்னும் சான்றோர் போன்று அதை அமைதியாய் உண்டனர் நம் சமயகுரவர். ஆனால் சாக்கிரடீஸ்போல் மரிக்காமல், நீலகண்டனருளால் நிலைகலங்காது அன்பும் அருளும் திகழ விளங்கினர். இவற்றைக் கண்டும் மனம் திரும்பாத பொய்ச்சமண முனிவர்கள், யானையை ஏவி அவரைக் கொல்லுவிக்கும்படி வேந்தனுக்குக் கூறினர். அவ்வாறே மதிகலங்கிய மன்னனும் ஏவினான். ஆனை உரி போர்த்த அரன்கழலை நெஞ்சத் திருத்திய அடியார், "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்" என்னும் பதிகம் பாட அந்த யானை அவரை வலம்வந்து பணிந்து திரும்பிச் சென்று, தன்னை ஏவிய கொடியோரைக் கொல்லத் தொடங்கியது.

இனியும் நாவுக்கரையர் நம்மிடமிருந்தால், நாசமேயாவோம் என்றெண்ணி வெருவிய சமணர்கள், அவரைக் கல்லினோடு சேர்த்துக் கட்டிக் கடலில் தள்ளிவிடுவதே கடனெனக் காவலனிடம் கட்டுரைத்தார்கள். அவனும் அவ்வாறே செய்வித்தான். "கல்லிற் பூட்டிக் கடலிற் பாய்ச்சினும், நல்துணையாவது நமச்சிவாயவே" என்று நாவுக்கரசர் உறுதியாக்கொண்டு, "சொற்றுணை வேதியன்" என்னும் பதிகம் பாடினர். கல்லே புணையாய் மிதக்க, நம் பெரியார் திருப்பாதிரிப்புலியூரில்* கரையேறினர். இந்த அதியற்புதச் செயல் அக்காலத்தில் பல்லாயிர மக்கள் நேரிற்கண்டது; **வாக்கின் மன்னர்** திருவாக்கினாலேயே மெய்ப்பிக்கப்படுவது. தம்முயிருக்குப் பன்முறை சமணர் தீங்குசெய்ய முயன்றபோதும் **தாண்டக வேந்தர்**, அவர்கள்மீது கோபமோ பகைமையோ கொள்ளாதிருந்ததும், திருவருள் தம்மை எப்படியும் காக்கும் என்று சிறிதும் நிலைகலங்கா திருந்ததும் அவரது அளப்பரும் மேன்மையை உணர்த்துமன்றோ?

கடலினின்று கரையேறிய பெரியார் தமக்குத் தோன்றாத் துணையாயிருந்த இறைவனைப் பாதிரிப்புலியூராலயத்திற் கண்டு பதிகம் பாடிப் போற்றியபின், மீண்டும் திருவதிகை சேர்ந்தனர். அப்போது அவரைப் பெருமகிழ்ச்சியோடு எதிர்கொண்டழைத்த

---

*இப்போது இது கரையேறவிட்ட குப்பம் என்று வழங்கும்.

அதிகை வாசிகள் கண்ட அவர் கோலத்தைக் கீழ்வரும் பெரிய புராணச் செய்யுள் படம் பிடித்ததுபோற் காட்டும் :—

" தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே "

திருஅதிகையில் பலநாள் தங்கித் திருத்தொண்டாற்றி வருகையில், மகேந்திர பல்லவன் உண்மையுணர்ந்து, சைவ மெய்ச் சமயம் சார்ந்து, தன்பேரால் குணதரவீச்சரம் என்னும் சிவன் கோயிலொன்றைத் திருவதிகையிலேயே கட்டுவித்தான்.

இப்பால் **வாகீசர்** சிவஸ்தலங்கள் பலவற்றையுங் கண்டு வணங்க விரும்பித் திருவெண்ணெய்நல்லூர் முதலிய நடுநாட்டுத் தலங்கள் சிலவற்றைத் தரிசித்துவிட்டுத் திருப்பெண்ணாகடம் அடைந்தார். அவ்வூரில் தூங்கானைமாடம் என்னும் திருக்கோவிலிற்குச் சென்று "பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்" என்னும் பதிகம் பாடி, இடபக்குறியும் சூலக்குறியும் சிவபெருமானாணையின்படி பூதமொன்றால் தம் தோளிற் பொறிக்கப் பெற்றார்.

பின்பு வாக்கின்மன்னர் சிதம்பரத் திருத்தலத்தையடைந்து, திருச்சிற்றம்பலமுடையாரைப் பன்னாள் பணிந்து, பாமாலை சூட்டி மகிழ்ந்திருந்தார். அங்கிவ்வாறிருக்கையில், சீகாழியில் ஆளுடையபிள்ளையார் அம்மை திருமுலைப்பாலுண்டு திருஞான சம்பந்தராய் விளங்குஞ் செய்தியைக் கேட்டார். உடனே பிள்ளையாரைக் காண வேட்கைகொண்டு சீகாழியை அணுகினார். திருநாவுக்கரசர் தம்மைக் காண வருகின்றதை யறிந்த திருஞான சம்பந்தர் என்னும் தெய்வக் குழந்தை, அன்பர் கூட்டத்தோடு நம் பெரியாரை எதிர்கொண்ட அளவில், "**அப்பரே**" என்று பேரன்போடு அவரை அழைத்தது. அது முதலாகத் திருநாவுக்கரசருக்கு "**அப்பர்**" என்னும் ஒரருமைத் திருநாமமும் வழங்கி வரலாயிற்று. பின்பு இருவரும் சீகாழியிலும் திருக்கோலக்காவிலும் இறைவனை வழிபட்டு மகிழ்ந்தார்கள்.

அப்பர், சம்பந்தரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு, சோழநாட்டு வேறு பல தலங்களை வணங்கிச்சென்று, திருச்சத்திமுற்றத்தை யடைந்தார். அங்கு "கோவாய் முடுகி" என்

னும் பதிகத்தில் இறைவ னடிச்சுவட்டைத் தமது முடிமேற் பொறித்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தார். இறைவ னாணைப்படி அவர் நல்லூர் சேர்ந்ததும் அவ்வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது.

பின்பு திருவையாற்றுக் கணித்தாயுள்ள திங்களூர் சேர்ந் தார் திருநாவுக்கரசர். அவ்வூரில் அப்பூதியார் என்னும் அந்தண ரொருவர் இவர் பெருமையைக் கேள்வியாலுணர்ந்து, இவரையே தமது ஆசாரியராகக் கொண்டு, தமது மைந்தர் முதலியோர்க் கும், தாம் செய்த பல்வகைத் தருமங்கட்கும் இவர் பேரையே அமைத்து அன்பு செலுத்திக் கொண்டிருந்தார். இவ்வுண்மை யைத் திங்களூரை யடைந்த பின்பே அப்பர் அறிந்தார். அப்பூதி யார் வீட்டிற்கு அப்பர் எழுந்தருளியபோது, தாம் போற்றும் திருநாவுக்கரசரே வந்தவர் என்று அவ்வந்தணர் அறியவில்லை. யாரோ ஒரு சிவனடியார் என்று கொண்டு வழிபட்டு நின்ற நிலை யில், அப்பரும் அவரும் சொல்லாடிய விவரம் அன்பர்க்குப் பேரின்பம் விளைக்கும். தாம் நாளும் ஏத்தும் அப்பரே அவரெனப் பின்னரறிந்துகொண்ட அந்தணத் திலகர், அளவிலா மகிழ்ச்சி கொண்டு போற்றி, **ஆளுடைய அரசர்க்குத்** தம்மில்லத்தில் திருவமுது செய்விக்க எண்ணி ஆயத்தஞ் செய்கையில், அவரது பெரிய பிள்ளையாகிய மூத்த திருநாவுக்கரசு, அடியார் திருவமுது செய்தற்கு வேண்டிய வாழைக்குருத்தை அரியப் புறக்கடைக்குச் சென்றான். அரிகையில், பாம்பு தீண்டப் பெற்றான். விடந் தன்னைக் கொல்லுமுன், குருத்தைத் தாயாரிடம் சேர்த்துவிட்டு உயிர் நீத்தான். தாய் தந்தையர் இதை யறிந்தும், அடியார் திருவமுது செய்தலில் தவக்கம் நேரலாகாதென்னும் அன்பும் திண்மையும் உடையராய், இறந்த மகனுடம்பை ஒரு பாயிற் சுருட்டி வீட்டின் புறத்திற் கிடத்திவிட்டு, அப்பரைத் திருவமுது செய்தருள அழைத்தார்கள். வணங்கினோர்க்குத் திருநீறு தருஞ் சமயத்து அப்பர் மூத்த திருநாவுக்கரசரைப் பற்றிக் கேட்டு, உண்மை யறிந்து கொண்டார். அப்பூதியாரும் அவர் அருமை மனைவியாரும் கொண்டிருந்த அடியார் பத்தியை அப்பர் வியந்து பாராட்டித், திங்களூர்ச் சிவனாலயத்தெதிரே இறந்த மைந்த னுடலத்தைக் கொணரச் செய்து, "ஒன்று கொலாம்" என்னும் பதிகமோதி யருளினார். இறந்த மைந்தன் உயிர் பெற்றெழுந் தான். பின்பு அப்பூதியாரும் மைந்தரும் தம்மருகிருக்க, அப்பர்

திருவமுது செய்தருளினார். சமய உணர்வும் ஒழுக்கமும் விஞ்சி। விடத்துச் சாதி மறைந்தொழிந்து போமென்பதற்கு இந்த மெய்ச் சரிதம் ஒரு சான்றாகும்.

அப்பர் காவிரிக் கரையிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாரூரை யடைந்து அங்குப் பலநாள் தங்கி, அதற் கருகிலுள்ள தலங்கட்குச் சென்று பணிந்து வந்தார். பின்பு திருப்புகலூரில் முருகநாயனார் திருமடத்தில் தங்கியிருந்தபோது திருஞானசம்பந்தர் இவரைத் தேடி வந்தார். திருவாரூர்த் திருவாதிரை விழாவின் சிறப்பை அப்பர் வாக்காலுணர்ந்தார். உடனே அவ்வூருக்குச் சென்று தியாகேசரை வணங்கிப் பின்பு புகலூர் திரும்பினார். சிறுத்தொண்டர், திருநீலநக்கர் முதலிய சீரிய அடியார்களும் வந்து சேர, அன்பர் திருக்கூட்டம் பேரின்பத்தில் மூழ்கியிருந்தது.

பின்பு அப்பரும் சம்பந்தரும் ஒன்று சேர்ந்து பல தலங்கட்கு யாத்திரைசெய்து, திருவீழிமிழலையை யடைந்தார்கள். அதுகாலை மிழலை நாட்டில் பஞ்சமேற்பட்டமையால் அடியார்கள் ஆதரிப்பாரின்றி வருந்துவதைக்கண்டு உள்ளம் நொந்தனர் சைவத்தின் கண்ணனைய சம்பந்தரும் அப்பரும். அதனை யுணர்ந்த மிழலை நாதர் அப்பெரியார்கள் கனவில் தோன்றி, திருக்கோயிலிற் குறித்த இரண்டிடங்களில் பொற்காசு நாடோறும் இருவருக்கும் வைத்தருளுவதாக உணர்த்தினார். சம்பந்தர்க்கு வைக்கப்பெற்ற காசு வாசியுடையதா யிருந்தது. கைத்தொண்டு செய்யும் அடியவரான அப்பர்க்கருளிய காசு வாசியில்லாததா யமைந்தது. அதுகண்டு மகிழ்ந்த சம்பந்தர், பதிகம் பாடி வாசி தீர்ந்த காசு நல்கப்பெற்றார்.

பிறகு பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு நம் பெருமக்களிருவரும் திருமறைக்காட்டை யடைந்தார்கள். அங்குள்ள சிவமூர்த்தியை வேதங்கள் பூசித்த பண்டைக்காலந் தொடங்கித் தம்காலம் வரை மூடப்பட்டிருந்த கோயிலின் திருக்கதவைத் திறக்கப் பாடும்படி சம்பந்தப் பெருமான் அப்பர்க்குச் சொன்னார். அவராணையின்படி அப்பர் பெருமானும், "பண்ணினேர் மொழியாள்" என்னும் பதிகம் பாடிக் கதவத்தை அரிதில் திறப்பித்தார். மறைக்காட்டுறையு மண்ணளர் அவரைத் திருவாய்மூருக்கு வரும்படி கனவிற் பணித்து அவர் முன் செல்ல, அப்பர் பின்தொடர்ந்து அவ்வூரை யடைந்தார். அடைந்ததும் இறைவர் மறைந்தார். சம்

பந்தரும் அவ்வூர் வந்தடைந்தார். இருவருக்கும் சிவபெருமான் காட்சி தந்தருளினார்.

திருவாய்மூரிலிருந்து திருமறைக்காடு திரும்பி, இருவரும் வதிந்து வருகையில், பாண்டி நாட்டிலிருந்து மங்கையர்க்கரசியாரா லனுப்பப்பட்ட சிலர் சம்பந்தரைக் கண்டு, அந்நாட்டை மூடியிருந்த சமண இருளையகற்றிச் சைவவொளியைப் பரப்புதற்காக அங்கெழுந்தருள வேண்டுமென்று அவரை வேண்டினார்கள். சம்பந்தர் அதற்கிசைந்து புறப்படுகையில், அப்பர், சமணர் பொல்லாங்குகளை எடுத்துக்காட்டித் தாம் போய்வருவதாய்ச் சொல்லிப்பார்த்தார். சம்பந்தர் இணங்கவில்லை. கோள்கள் வலியுடையனவா யில்லை என்று கூறினார். பிள்ளையார் அதையும் தடையாய்க் கொள்ளவில்லை. பின்பு, உடன் வருவதாக உரைத்தார் அப்பர். அதையும் பிள்ளையார் அங்கீகரியாது அப்பரைச் சோழநாட்டிலேயே இருக்கும்படி நிறுத்திவிட்டு விடைபெற்று, மதுரையை நோக்கிப் புறப்பட்டுவிட்டார்.

பின்பு, திருநாவுக்கரசர், திருநாகைக்காரோணம் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு பழையாறை வடதளி வந்தடைந்தார். அங்கிருந்த சமணர்கள் சிவாலயத்துச் சிவலிங்கம் தெரியவொட்டாது மறைத்து, அதைத் தம் பள்ளியாக்கி வைத்திருந்தனர். சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தல்லது உண்பதில்லையென்று அப்பர் சத்தியாக்கிரக விரதங் கொண்டுவிட்டார். இறைவன் சோழ அரசனுக்கு இந்நிலைமையைக் கனவி லுணர்த்த அரசன், சமணர் சூழ்ச்சியை மாற்றி அப்பருக்குச் சிவலிங்க தரிசனங் கிடைக்கப்பண்ணினான். அப்பர் "தலையெலாம் பறிக்கும் சமண்" என்னும் பதிகம்பாடி மகிழ்ந்து வணங்கிப் பின் பல தலங்களைப் பாடிச்சென்று திருப்பைஞ்ஞீலி யடைந்தார்.

இவ்வூர்க்கு வழிநடந்து செல்லும் அப்பர் மிக இளைத்துப் பசியாலும் நீர்வேட்கையாலும் வருந்தினார். அந்நிலைமையில், அவர் வருத்தத்தை நீக்கத் திருவுளங்கொண்ட பைஞ்ஞீலிச் சிவனார், சைவ வேதியர் கோலங்கொண்டு பொதிசோறோடு அப்பர் வரும் வழியில் ஓர் அழகிய சோலையிற் காத்திருந்து, சோறும் நீருந்தந்து அவர் இளைப்பை மாற்றி, அவரோடு திருப்பைஞ்ஞீலி வரை சென்று திடீரென மறைந்தார். தனது மெய்யடியார் வருந்த ஆண்டவன் பார்த்திருப்பானோ? இரானன்றே!

அங்கிருந்தும் அப்பர் திருஅண்ணுமலை முதலிய நடுநாட்டுத் தலங்களைவணங்கிக்கொண்டு, பின்பு தொண்டைநாட்டிற் புக்குக் காஞ்சிபுரம் முதலிய தலங்களைக் கண்டு திருப்பதிகங்கள் பாடிச் சென்று திருக்காளத்தியை யடைந்தார். தென்கயிலை எனப் பெறும் திருக்காளத்தியி லிருக்கும்போது வடகயிலைக்குச் செல்ல வேண்டுமென்னும் பெருவிருப்பம் **சொற்கோ**வின் திருவுள்ளத்தில் தோன்றியது. அதன்படி அவர் புறப்பட்டு அடியார் குழாத்துடன் வாரணுசி வரையிற் சென்ருர். அவர்களை அங்கு நிறுத்தி விட்டுத் தமது தளர்ந்த திருமேனியிற் கையும் காலும் சிதைந்து தேய்வதனுலும் தளராத மனமுடையராய் மார்பினுற் புரண்டு புரண்டு சென்று, அதுவுஞ் செய்ய இயலாத நிலையில் அசைவற்றிருந்தார். அச்சமயத்துக் கயிலையாளியாங் கண்ணுதற் பெருங் கடவுள், முனிவர் வேடம் பூண்டு அப்பர் முன் தோன்றி, "மானிடர் காணுந்தகையதன்று திருக்கயிலை; ஆதலால் நீர் திரும்பிச் செல்லலே நுமக்குக் கடன்' என்று மனந்துளக்கும் மாற்ற மருளினுர். பூதமைந்தும் நிலையிற் கலங்கினும் கலங்கா நெஞ்சங் கொண்ட நம்மப்பர், "ஆளுநாயகன் கயிலையிலிருக்கை கண்டல்லால் மாளுமிவ் வுடல்கொண்டு மீளேன்" என மறுத்தார்.

வந்த வேதியர் அந்தர்த்தானமாகி "ஓங்கு நாவினுக்கரசனே எழுந்திரு" என்று அருளிச் செய்தனர். அவ்வளவில், அப்பர் ஊறனைத்தும் நீங்கிய உடம்பொடு எழுந்து ஒளிதிகழ்ந்தார். எழுந்ததும், தாம் கயிலை காண அருளுமாறு ஆண்டவனை வேண்டினுர். அம்மையப்பர் அங்கிருந்ததொரு பொய்கையைக் காட்டி அதில் முழுகித் தாம் கயிலையிலிருக்கும் முறைமையைத் திருவையாற்றிற் காணும்படி பணித்தருளினுர். அவ்வாணையின்படி அப்பர் ஐந்தெழுத்தோதிப் பொய்கையில் மூழ்கினவுடனே, திருவையாற்றிலொரு திருக்குளத்திலிருந்துங் கரையேறினுர். தாம் கண்டயாவும் சத்தியும் சிவமுமாய் விளங்கின. திருக்கோயிலின் முன் வந்து பார்க்கையில் அதுவே திருக்கயிலாயமாய் விளங்கியது. பல அரிய பதிகங்களைப் பாடிப் பரவினுர் அப்பர். அப்பர் மன வுறுதிக்கு இப்பயணமும் ஓர் அரிய சான்ருகும்.

பின்பு காவேரி மருங்குள்ள பலதலங்களை அப்பர் தரிசித்துக் கொண்டு, திருப்பூந்துருத்தியில் ஒரு திருமடம் அமைத்து, அதில் தங்கியிருந்தார். அந்நாளில், பாண்டியநாட்டில் சமணக்குறும்பை அகற்றிச் சைவவிளக்கம் பரப்பிச் சோழநாடு திரும்பும் சம்பந்தர்

அப்பரைக்காண வேணவாக்கொண்டு, பூந்துருத்தி நோக்கிவந்து கொண்டிருந்தார். இதை யுணர்ந்து உவகை மீக்கொண்ட அப்பர், வேருெருவருமறியா வகையில் எதிர் சென்று, சம்பந்தர் எழுந்தருளிவரும் பல்லக்கைச் சுமப்பாரொடு கலந்து பெருங் களிப்புடன் அதைச் சுமந்து வருகையில், திருப்பூந்துருத் திக்குள் பல்லக்கு வந்துவிட்டது. "அப்பர் எங்குற்ருர்" என்று சம்பந்தர் ஆவலோடு வினவினர். "உம்மடியேன் உம்மடி கள் தாங்கிவரும் பெருவாழ்வு வந்து எய்தப்பெற்று இங்குற் றேன்" என்று அப்பர் மறுமொழி தந்தார். உள்ளப் பதைப் புடன் சம்பந்தர் விரைந்திழிந்து அப்பரை வணங்க, அவரும் விரைந்து எதிர் வணங்க, இருவரும் ஏனையடியார்களும் பெரு மகிழ்வெய்தினர்கள்.

சம்பந்தர் வாயிலாகப் பாண்டி நாட்டுச் செய்திகளை யெல் லாம் அறிந்த அப்பர் அந்நாட்டிற் கெழுந்தருளி அங்குள்ள தலங் களை வணங்கினர். பின்பு பொன்னிநாடு திரும்பித் திருப்புகலூ ரில் தங்கிப் பல அரிய பதிகங்களைப் பாடினர். அவருக்கு மண் ணுசை யில்லாதது போலவே, பொன்னுசையும் பெண்ணுசையு மில்லை யென்பதை உலகுக்கு வெளியிட வேண்டிப் பரமசிவனர் ஒருநாள் ஆலயத்தின் திருமுன்றிலில் அப்பர் திருத்தொண்டு செய் யும்போது, உழவாரப் படை நுழைந்தவிடமெல்லாம் பொன் னும் நவமணிகளும் பொலிந்திலங்கச் செய்தார். அப்பர் அவை களைக் கண்டும் அவைகளைப் பருக்கைக் கற்களோடொப்ப மதித்து உழவாரத்திலே ஏந்தி எறிந்து விட்டார். சிவனடியார் கள் 'ஓடும்செம் பொன்னும் ஒக்கவே நோக்கு'ம் இயல்பின ரன்ருே? பின்பு தேவலோகப் பொது மாதர், அப்பர் எதிர்த் தோன்றித் தம் தோதக வித்தையெல்லாங்காட்டி அவர் மனதை மருட்ட முயன்றனர். சிறிதும் நிலை கலங்காப் பேருணர்வுநிலை நின்ற பெரியார், அவர்கள் தமக்கு இன்னலெதுவும் செய்ய முடி யாதென்னு முண்மையைக் கூறி, அவர்களைப் போமாறு பணிக்க அவர்களும் பெரியாரை வணங்கி அகன்ருர்கள். சிலநாள் கழிந்த பின்னர், மன்னிய அன்புறு பத்திவடிவான வாகீசர், இனியும் மண்ணுலகில், நில்லாமே தாம் மாதொரு பாகன் மலரடிக்கீழ்த் தங்கிவிட வேண்டுமென்று கருத்துக் கொண்டார். அக்காலம் கி.பி. 655ஐ ஒட்டியிருக்கலாம். உயிர்க் குறுதிபயக்கும் எண்ணில் திருப்பாசுரங்களைத் திருவாய்மலர்ந்தருளிய நம் திருநாவுக்கரசு

சுவாமிகள், ஒரு சித்திரை மாதத்துச் சதயத் திருநாளில், "எண்ணு கேன் என்சொல்லி எண்ணுகேனே" என்னும் தமது கடைசித் திருத்தாண்டகத்தைப் பாடி, "நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ்" எய்தினார்கள்.

திருச்சிற்றம்பலம்

போற்றுதிரு வாமூரில் வேளாண் தொன்மைப்
பொருவில்குறுக் கையரதிபர் புகழ னார்பால்
மாற்றருமன் பினிற்றிலக வதியா மாது
வந்துதித்த பின்புமரு ணீக்கி யாருந்
தோற்றியமண் சமயமுறு துயர நீங்கத்
துணைவரருள் தரவந்த சூலை நோயால்
பாற்றருநீ ளிடரெய்திப் பாடலிபுத் திரத்திற்
பாழியொழித் தரனதிகைப் பதியில் வந்தார்.

வந்துதமக் கையரருளால் நீறு சாத்தி
வண்தமிழால் நோய்தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி
வியன்சூலங் கொடியிடபம் விளங்கச் சாத்தி
அந்தமிலப் பூதிமகன் அரவு மாற்றி
அருட்காசு பெற்றுமறை யடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலை கண்டு
பூம்புகலூர் அரன்பாதம் பொருந்தி னாரே.

இச்சரித்திரம், சென்னை மாகாண உதவிக் கல்விப்பகுதித் தலைவர் திருவாளர் - ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி. அவர்களால் எழுதப் பட்டது.

# சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

அருட்டுறை அத்தற் கடிமைப்பட் டேன்இனி அல்லன்என்னும்
பொருட்டுறை யாவதென் னேஎன்ன வல்லவன் பூங்குவளை
இருட்டுறை நீர்வய லுவற் பதிக்கும் பிரான்அடைந்தோர்
மருட்டுறை நீக்கிநல் வான்வழி காட்டிட வல்லவனே.

—திருத்தொண்டர் திருவந்தாதி

மலர்மிசை அயனு மாலுங் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூ ராவணப் பழமை காட்டி
உலகுய்ய ஆண்டு கொள்ளப் பெற்றவர் பாத முன்னித்
தலைமிசை வைத்து வாழுந் தலைமைநந் தலைமை யாகும்.

—பெரியபுராணம்

திருக்கைலாய மலையில் ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் உமாதேவியாரோடு எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானது அடியவர் கூட்டத்துள் ஒருவராகிய ஆலாலசுந்தரர் என்பார், ஒருநாள் அன்பர் செய்யும் அருச்சனையைக் கொண்டருளுகின்ற அக்கடவுளுக்குத் தரிக்கும் பொருட்டுப் புட்பங்களைக் கொய்தற்குத் திருநந்தனவனத்திற்குப் போயினர். அவ்விதம் போன காலத்துப் பார்வதி தேவியாருக்குத் தரிக்கும் பொருட்டு அந்தத் திருநந்தன வனத்திலே புட்பங் கொய்து கொண்டிருந்த அவருடைய சேடியர்களாகிய அநிந்திதை, கமலினி என்னும் பெண்கள் இருவரையும் பார்த்து அவர்கள்மீது ஆசை கொண்டனர். அப்பெண்கள் இருவரும் ஆலால சுந்தரரைப் பார்த்து அவர்மீது காதலுற்றனர். இவ்விதம் ஆசை கொண்டனரேனும் ஒவ்வொருவரும் தம்மனதைத் திருப்பிப் புட்பங்களைக் கொய்து, சிவ சன்னிதானத்திற்கும் தேவியார் சன்னிதானத்திற்கும் திரும்பி விட்டனர். எங்கும் நிறைந்த ஆண்டவன் ஆலாலசுந்தரரைப் பார்த்து " நீ கைலைமலையினிடத்து இருந்தும் பெண்கள்மீது இச்சை செலுத்தியமையால் தென்னாட்டிலே மானுடனாகத் தோன்றி அப்பெண்கள் இருவரோடு இருந்து இன்பம் அனுபவிப்பாயாக " என்று திருவாய்மலர்ந்தருளினர்.

அதைக் கேட்ட ஆலாலசுந்தரர் மனங்கலங்கி இறைவனை வணங்கி, 'எம்பெருமானே! தேவரீரது திருவடிகளைப் பிரிந்து மயக்கம் தருகின்ற மனிதப் பிறப்பை எடுத்துச் செய்வது இது

என்றும் நீக்குவது இதுவென்றும் அறியாது மயங்கும் காலத்துத் தேவரீரே தோன்றி அடியேனைத் தடுத்து ஆட்கொள்ளவேண்டும்' என்று பிரார்த்திக்க, வேண்டுவார் வேண்டுவதே யீவான் ஆகிய இறைவனும் அதற்கு இசைந்தனன்.

பின் ஆலாலசுந்தரர், பரதகண்டத்தில் தமிழ் நாடாகிய தென்னாட்டில் உள்ள திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூர் என்னும் திருப்பதியில், ஆதிசைவர் குலத்தில் சடையனார் என்னும் சிவாசாரியரது அருந்தவ மனைவியாராகிய இசைஞானியார் என்பவரிடத்தில் திருஅவதாரம் செய்தனர். அவருக்கு, நம்பி ஆரூரர் என்று பெயர் புனைந்தனர். அப்பிள்ளை சிறுதேர் உருட்டி வீதியில் ஒருநாள் விளையாடும்போது, அந்நாட்டிற்கு அரசராகிய நரசிங்கமுனையர் என்பார் அப்பிள்ளையின் வனப்பைக் கண்டு அவர்மீது ஆசைமிகுந்து, தந்தையாராகிய சடையனாரிடத்துச் சென்று அப்பிள்ளையைத் தனக்குத் தருதல் வேண்டும் என்று கேட்டுப் பெற்றுக்கொண்டு போய் அப்பிள்ளையை அபிமான புத்திரராக வளர்த்தனர். அவ்விதம் அரசரால் வளர்க்கப்பட்டவராயினும், தமது அந்தணர் குலத்திற்கு உரிய ஒழுக்கத்தை உடையவராகி வளர்ந்து உரிய காலத்து உபநயனம் செய்யப் பெற்று, சகல கலைகளிலும் வல்லவராய் மணப்பருவத்தை அடைந்தனர். அப்பருவம் கண்ட தந்தையார், தம் குலத்திலேயே சடங்கவி சிவாசாரியார் என்னும் புத்தூர் மறையவரிடம் பெண் பேசச்செய்து, அவர் உடன்பட்டது கண்டு மணத்தற்குரிய நன்னாள் நிச்சயித்துத் திருமணக்கோலம் கொள்ளச் செய்து புத்தூருக்குச் சென்று நம்பியாரூரருடன் இருந்தனர். அவ்விதம் நம்பியாரூரர் மணப்பந்தலுக்கு முன்னிருந்த காலத்து ஆண்டவர் முன்னர் திருக்கைலாயத்தில் சுந்தரமூர்த்திக்குத் திருவருள் செய்த வண்ணம் அவரைத் தடுத்து ஆட்கொள்ளும் நிமித்தம் ஒரு முதிய அந்தண வடிவங்கொண்டு அம்மணப் பந்தலில் எழுந்தருளினர். எழுந்தருளிய அந்தணர் அங்குள்ளாரை நோக்கி, "யான் சொல்லும் வார்த்தையைக் கேட்டல் வேண்டும். இந் நம்பியாரூரன் எனது அடிமை. ஆதலால் இவன் எனக்கு வேலை செய்தல்வேண்டும்" என்று அருள் செய்தனர். நம்பியாரூரர் கிழ வேதியரைப் பார்த்து, 'அந்தணருக்கு அந்தணர் அடிமையாதல் இன்றே நீ சொல்லக் கேட்டேன். இவ்விதம் கூறுகின்ற நீ 'பித்தனோ' என்று சொல்ல, மறையவர், "நான் பித்தனானால்

ஆகட்டும்; பேயனுனல் ஆகட்டும். எத்தனை வசைமொழி நீ சொன்னாலும் நான் அதற்காக நாணமடையேன். நீ வித்தகம் பேசவேண்டாம். எனக்குப் பணிசெய்தல் வேண்டும்" என்றனர். நம்பியாரூரர், 'நான் அடிமை என்பதைத்தாபிக்க எனது பாட்டன் உமக்கு ஓலைகொடுத்தனன் என்றால் ஓலையைக் காட்டும்' என்ன மறையவர் " நீ அடிமைத்தொழில் செய்ய உரியவனேயன்றி ஓலை காணவல்லன் அல்லன்" என்று கூறுதலும் நம்பியாரூரர் மறைய வர் கையில்உள்ள ஓலையைப் பிடுங்கிக் கிழித்துவிட்டனர். ஓலையை யிழந்த மறையவர் ஓவெனக் கூவினர். அப்பொழுது, "நீர் திரு வெண்ணெய்நல்லூரில் வாழ்பவர் என்று கூறினீர் ஆகையால், திருவெண்ணெய் நல்லூருக்கே சென்று இவ்வழக்கைத் தீர்ப் போம் வாரும்" என்றனர் ஆரூரர். மறையவரும் "அத்திருவெண் ணெய்நல்லூரிலுள்ள மறையவர் முன் நான் இன்னும் வைத் துள்ள மூலஓலையைக் காட்டி நீ எனக்கு அடிமை என்பதை நிலை நாட்டுவேன்" என்று கூறித் தண்டு ஊன்றி முன் நடந்தனர். நம்பியாரூரரும் மற்றை மறையவரும் பின் தொடர்ந்தனர். ஐயர் திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்று அங்குள்ள வேதியரிடம் தம் வழக்கைச் சொல்லுதலும், அவ்வேதியர் அனைவரும் சிவ பெருமானுகிய கிழப் பிராமணரை நோக்கி மிகுதியும் நகைத்து, 'பிராமணர்க்குப் பிராமணர் அடிமையாதல் இவ்வுலகத்து இதுவரையும் இல்லை' என்றனர்.

வாதியாகிய ஐயர், "நான் பொய் வழக்கைக் கொண்டு வர வில்லை. மெய்யாகிய வழக்கையே கொண்டுவந்தேன். இந்த நம்பி யாரூரன் என்னிடமிருந்து பறித்துக் கிழித்த ஓலை இவன் பாட் டன், தானும் தன் மரபினரும், எனக்கு அடிமை என்று எழுதிக் கொடுத்த அடிமை ஓலை" என்றனர். உடனே வேதியர்கள் எல் லோரும் நம்பியாரூரரை நோக்கி, 'நம்பியாரூரரே! இம்மறைய வர் காட்டிய ஓலையைக் கிழித்ததால் உம்முடைய வழக்கு வெற்றி அடையுமென்று எண்ணுதல் கூடுமோ? இப்போது இவ்வேதி யர் தம் வழக்கை யாவரும் ஒப்பும்படி சொல்லினர். இனி உமது எண்ணம் யாது?" என்றனர். நம்பியாரூரர், "ஓ வேதியரே! நான் ஆதிசைவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அறிந்தும் இவ்வேதியர் வழக்கை எங்ஙனம் ஒத்துக்கொள்ளுதல் கூடும்" என்றனர். மறையவர் விருத்த வேதியராகிய சிவபெருமானை நோக்கி, 'இந்த நம்பியாரூரர் உமது அடிமை என்று நிச்சயிப்ப

தற்கு ஆட்சி, எழுத்து, சாட்சி என்ற மூன்றில் ஒன்றைக் காட்டுதல் வேண்டும்' என்றனர். விருத்த வேதியர் தம்மிடத்திருந்த மூல ஓலையைக் காட்டினர். அம்மூல ஓலையைக் கண்ட வேதியர் மெய்யென்று தீர்மானித்து நம்பியாரூரரை நோக்கி, "நீர் இம்மறையவர்க்கு அடிமையே ஆவீர்" என்று தீர்மானித்தனர். நம்பியாரூரரும் அதற்குச் சம்மதித்தனர். பின்னர் மறையவர் விருத்த வேதியரை நோக்கி, 'நீர் காட்டிய ஓலையில் எம்முடைய ஊரே உம்முடைய ஊராக எழுதப்பட்டிருப்பதால், உமக்கு இவ்வூரில் தலைமுறையாக உள்ள வீடும் பொருளும் காட்டுதல்வேண்டும்' என்றனர். இறைவன் "இத்தனை விருத்தர்களில் ஒருவரேனும் என்னுடைய வீடு முதலியவற்றை அறியாதிருப்பீர்களானால் காட்டுகின்றேன் வாருங்கள்" என்று கூறி, நம்பியாரூரரும் மறையவரும் பின்வர, திருவருட்டுறை என்னும் ஆலயத்துள் புகுந்தனர். பின்னர் அவையத்தவர் அவ்விருத்த வேதியரைக் காணாது திகைத்து நின்றனர். நம்பியாரூரர், "ஈதென்னை! என்னை அடிமை கொண்ட பிராமணர் திருக்கோயிலினுள் புகுந்தனர்" என்று வியந்து அவரைத் தொடர்ந்து போய்க் கூப்பிடுதலும், சிவபெருமான் இடப வாகனத்தின்மீது பார்வதி சமேதராய்க் காட்சி தந்து "ஆரூரனே! முன்னர் தொண்டனாகிய நீ பெண்கள்மீது மனம் வைத்தமையால் பூமியில் தோன்றினாய்; நீ முன்னர்க் கூறியவண்ணம் உன்னைத் தடுத்தாண்டோம்" என்று திருவாய் மலர்ந்தனர். நம்பியாரூரரும் தம்மை மறந்தவராய், "ஐந்தொழில் புரியும் ஆண்டவனே அடியேனை வலியத்தடுத்தாட்கொண்ட திருவருளை என்னென்று கூறுவேன்" என்று வணங்கினர். சிவபெருமானும் ஆரூரரை நோக்கி, "நீ நம்மோடு வன்சொற்களைச் சொல்லி வன்தொண்டன் என்ற பெயரைப் பெற்றனை. இனி உன்னால் அன்போடு செய்யத்தக்க அருச்சனை என்னைப் பாடுதலேயாகும். ஆதலால் இனித் தமிழ்ப் பாடல்களைப் பாடுதல்வேண்டும்" என்று அருள்செய்தனர். நம்பியாரூரரும் இறைவனை வணங்கித் 'தேவரீரது எண்ணிறந்த குணங்களில் யான் எதை அறிவேன்; யான் என்னென்று பாடுவேன்' என்றனர். அதற்குச் சிவபெருமான் 'நீ முன்னர் என்னைப் பித்தனென்று அழைத்தாய். ஆதலால் என்னைப் பித்தனென்றே பாடு' என்று அருள் செய்தனர். நம்பியாரூரரும் "பித்தா பிறைசூடி" என்னும் சொற்றொடரை முதலாகக்கொண்ட

திருப்பதிகத்தைப் பாடியருளினர். இது இவ்விதமிருக்கப் புத்தூரில் மணப்பெண்ணாக அமைந்த சடங்கவி சிவாசாரியருடைய புத்திரியார் மணம் நிறைவேறாததால், தமக்கு மணத்தலைவராகக்கொண்ட ஆரூரரையே சிந்தித்த வண்ணமாக இருந்து சிவனடியைச் சேர்ந்தனர்.

நம்பியாரூரர் திருவருட்டுறை, திருநாவலூர், திருத்துறையூர் முதலிய தலங்களில் திருப்பதிகம் பாடிச் சிதம்பரத்துக்குச் சென்று நடராஜரைத் தரிசிக்க விரும்பிப் பெண்ணை நதியைக் கடந்து, திருவதிகை என்னும் தலத்தில் திருநாவுக்கரசு நாயனார் உழவாரப்படை கொண்டு திருத்தொண்டு செய்த இடமாதலால், அதை மிதியாது செல்லுதல் வேண்டும் என்று அருகிலிருந்த சித்தவட மடத்தில் நித்திரை செய்தனர். சிவபெருமானும் அம்மடத்துக்குச் சென்று விருத்த வேதியர்போல் படுத்துத் திருவடி தீட்சை செய்தனர். தம்மீது பலமுறை உதைத்தறிவித்தவர் சிவபெருமானே என்று அறிந்து, "தம்மானை அறியாத சாதியார் உளரோ" என்னும் திருப்பதிகத்தைப் பாடினர். பின்னர் திருமாணிகுழி, திருத்தினை நகர் முதலிய தலங்களுக்குச் சென்று பாடி, சிதம்பரத்தின் எல்லையை அடைந்து திருக்கோபுரத்தை வணங்கிச் சபாநாயகரைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடித் துதித்தனர். அதன் பிறகு சபா நாயகர் திருவருளால், 'நீ திருவாரூரிலே நம்மிடத்துக்கு வா' என்று எழுந்த அசரீரி வாக்கைக் கேட்டுத் தில்லையை வணங்கிச் சீகாழியைச் சமீபித்தனர்.

அச்சீகாழிப்பதி திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திரு அவதாரம் செய்த தலமாகையால் அதை மிதித்தல் ஆகாதென்று எண்ணி எல்லைப்புறத்து வணங்கி வலம்வந்த காலத்து, பரமசிவன் காட்சிகொடுத்து அருளுதலும், "சாதலும் பிறத்தலும் தவிர்த்து" என்று திருப்பதிகம் பாடினர்.

அதன் பின்னர் திருக்கோலக்காவுக்கும், திருப்புன்கூருக்கும், மாயூரத்துக்கும், அம்பர்மாகாளத்திற்கும், திருப்புகலூருக்கும் போய்த் தரிசித்துத் திருவாரூரைச் சமீபித்தனர். இறைவன் கட்டளையின் வண்ணம் திருவாரூரில் வாழ்பவர் எல்லாம் அவரை எதிர்கொண்டழைத்தனர். திருவீதியில் செல்லும்போது, "கரையும் கடலும்" என்னும் தேவாரத்தைப் பாடித் திருக்கோயிலை அடைந்து, முன்னர் தேவாசிரிய மண்டபத்தைப் பணிந்து பிறகு

வன்மீகநாதரை வணங்கிப் பாடினர். வன்மீகநாதரும் "நாம் உனக்குத் தோழர் ஆனோம், நீ கொண்ட மணக் கோலத்துடன் எப்பொழுதும் இருப்பாய்" என்று அருள்செய்தனர். உலகத்தவர் அன்றுமுதல் அவரைத் தம்பிரான் தோழனென்று அழைத்தனர். திருவாரூரிலிருந்த நம்பிஆரூரர் தினந்தோறும்போய் வன்மீகநாதரைத் தரிசித்து வந்த காலத்துக் கைலையில் இருந்த கமலினி என்பவர் அத்திருவாரூரிலே உருத்திரகணிகையர் குலத்தில் பிறந்து பரவையார் என்னும் பெயருடன் மங்கைப்பருவம் அடைந்து தினந்தோறும் கோயிலுக்குப்போய் சுவாமி தரிசனஞ் செய்து வருபவராயிருந்தார். அவ்வம்மையாரைச் சுந்தரர் ஒரு நாள் கண்டனர். பரவையாரும் நம்பியாரூரரைப் பார்த்தனர். இவ்விதம் இருவருக்கும், காதல் உண்டாகியும் பின்னர் தம் மனதைத் திருப்பிக்கொண்டு, சுவாமி தரிசனஞ்செய்து, தத்தம் இருக்கைக்குச் சென்றனர். பின்னர் இறைவன் திருவருளால் இருவருக்கும் மணம் முடிந்தது. இவ்விதம் பரவையாரோடு வாழுங் காலத்து ஒருநாள் திருகோயிலை அடைந்து தேவாசிரிய மண்டபத்தில் சிவனடியார்கள் இருந்ததைக்கண்டு அவர்கள்மீது பக்தி மிகுந்தவராய் இவர்களுக்கு நான் அடியன் ஆகும்நாள் எந்நாள் என எண்ணியவராய்ச் சுவாமி தரிசனம் செய்யச் சென்றனர். இறைவனும் நம்பியாரூரரை "நீ நம்முடைய அடியவர்களைப் பாடு" என்று அருள்செய்தலும் நம்பியாரூரர் அடியார்களது வரலாறு இது என்று அறியாத அடியேன் அவர்களை எப்படிப் பாடுவேன் என்று வணங்கலும், இறைவனும் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடி எடுத்துக் கொடுத்து மறைந்தருளினர். நம்பியாரூரரும் அவ் வடியையே முதலாகக் கொண்டு திருத்தொண்டத் தொகை பாடினர். இந் நம்பியாரூரருக்குத் திருவாரூரிலிருந்த வேளாளராகிய குண்டையூர்கிழார் என்பார் ஒருவர் அரிசி முதலாகிய எல்லாப் பொருளும் கொடுத்துத் தொண்டு செய்துவரும் காலத்து மழை இல்லாமையால் வளம் சுருங்கவும் குண்டையூர் கிழார் இறைவனை நோக்கிப் பிரார்த்தித்தனர். இறைவனும் குண்டையூர் முழுவதும் நெல்மலையை நிறைத்தனர். அந்நெல் மலையைத் திருவாரூருக்குக் கொண்டுவர மக்களால் முடியாது

என்று எண்ணி நம்பியாரூரர் சிவபெருமானைநோக்கி, "நீள நினைந் தடியேன்" என்னும் பதிகத்தைப் பாடுதலும் நெல்மலை திருவா ரூருக்குப் பூதங்களால் போய்ச் சேர்ந்தது. பரவையாரும் அவர் அவர் வீடுகளுக்கு எதிரேயுள்ள நெல்மலையை அவர் அவர்கள் எடுத்துக் கொள்ளுதல் கூடும் என்று பறை அறையச் செய்து எடுத்துக் கொள்ளச் செய்தனர். சில நாள் சென்ற பிறகு திரு நாட்டியத்தான் குடியில் வசிக்கின்ற கோட்புலி நாயனார் நம்பியா ரூரரைத் தம்முடைய ஊருக்கு அழைத்துச்சென்று தம்முடைய பெண்களாகிய சிங்கடியார், வனப்பகையார் இருவரையும் மணஞ் செய்து அருளுதல்வேண்டும் என்று பிரார்த்தித்தலும், நம்பியாரூரர் அவர்களைத் தம்மக்களென்று சிறப்பித்துப் பாடி னர். பிறகு, பரவையார் பங்குனி உத்திரச் செலவிற்குப் பொன் வேண்டலும், நம்பியாரூரர் திருப்புகலூரை யடைந்து, நித்திரை செய்வதற்காக அக்கோயில் உள்ளிருந்த செங்கற்களைத் தலையணை யாக வைத்துத் தூங்கி விழித்தெழுந்தபோது, செங்கற்களெல் லாம் பொன்னாலாகிய கற்களாய் இருக்கப் பார்த்து, "தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்" என்னும் திருப்பதிகத்தைப் பாடிப் பொற்குவியலைப் பரவையாருக்குக் கொண்டுவந்து கொடுத்தனர். பிறகு பல தலங்களைத் தரிசித்துத் திருப்பாண்டிக் கொடுமுடிக் குப்போய், "மற்றுப் பற்றெனக் கின்றி" என்னும் நமச்சிவாயப் பதிகம் பாடித் திருக்கூடலையாற்றூர் முதலிய தலங்களுக்குச் சென்று கடவுளைத் தரிசித்துத் திருமுதுகுன்றுக்குப் போனார். அத்திருமுதுகுன்ற நாதர் பன்னீராயிரம் பொன் கொடுத்தருள அவர் அதை மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுத்துப் பரவையார்க்குக் கொடுத்தனர். பின்னர் திருநள் ளாறு முதலிய தலங்களை எல்லாம் தரிசித்துத் திருக்குருகாவூருக் குச் செல்லுங் காலத்து இறைவன்கொடுத்த பொதிசோற்றை யுண்டு, "இத்தனை யாமாற்றை அறிந்திலேன்" என்னும் திருப் பதிகம் பாடி நடுவிலுள்ள பல தலங்களைத் தரிசித்துத் திருநாவ லூரையடைந்து சிலநாள் அங்கிருந்தனர். பின் தொண்டை நாட்டிலுள்ள தலங்களைத் தரிசிக்க விரும்பித் திருக்கழுக்குன்றத் தைத் தரிசித்துத் திருக்கச்சூருக்குச் சென்று அங்கு இறைவன் பிச்சை யெடுத்துக் கொடுத்த அன்னத்தையுண்டு, "முதுவா

போரி கதற" என்னும் திருப்பதிகத்தைப் பாடிக் காஞ்சிபுரம், திருவோணகாந்தன்தளி, திருக்காளத்தி முதலாகிய தலங்களைத் தரிசித்துத் திருவொற்றியூர் வந்து சேர்ந்தனர். அக்காலத்து அநிந்திதையார் என்பவர் ஞாயிறு என்னும் ஊரிலிருக்கும் வேளாளரில் சிறந்தோங்கிய ஞாயிறுகிழார் என்பவருக்குப் பிறந்து, சங்கிலியார் என்னும் பெயர்பெற்று, மணப் பருவத்தை யடைந்து ஒருவரையும் மணக்க எண்ணாது தந்தையார் உத்தரவினைப் பெற்றுத் திருவொற்றியூரையடைந்து கன்னிகா மாடத்து இருந்து இறைவன் திருவருளை முன்னிட்டுப் பூமாலை முதலியவைகள் ஆண்டவனுக்குத் தொடுத்துக் கொடுத்து விரதங் காத்திருந்தனர். இவர் இவ்விதமிருக்குநாளில் அங்கு ஏகிய நம்பியாரூரர் திருக்கோயிலுக்குச் சென்றபோது சங்கிலியாரைக்கண்டு ஆசைகொண்டு அவரைத் தமக்கு மனைவியாக்கும்படி ஆண்டவனை வேண்டுதலும், ஆண்டவனும் சங்கிலியாருக்குத் தெரிவித்து அவரைப் பிரியாதிருக்கும்படி மகிழடியின்கீழ்ச் சபதஞ் செய்து கொடுக்கும்படி செய்து அடியவர்களால் மணத்தை முடியும்படிச் செய்தனர். இவ்விதம் சில காலம் சங்கிலியாரும் நம்பியாரூரரும் வாழ்ந்து வருங்காலத்துத் திருவாரூர் வசந்த உற்சவத்தை எண்ணி, " பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்" என்னும் பதிகத்தைப் பாடித் திருவொற்றியூரை விட்டு நீங்கிச் சபதம் தவறினமையால் கண்ணிழந்து திருமுல்லைவாயிலை வணங்கித் திருவெண்பாக்கத்தை அடைந்து, "திருக்கோயில் உள்ளிரோ" என்று பாடுதலும், "உளோம் போகீர்" என்று கடவுள் அவருக்கு ஊன்றுகோல் கொடுத்தனர். பின்னர் பல தலங்களைத் தரிசித்துக் காஞ்சிபுரத்துக்குச் சென்று கடவுளைப் பிரார்த்தித்தலும் இடக்கண் பெற்றனர்.

பின்னர்ப் பல தலங்களை வணங்கித் திருவாரூரை அடைந்து ஆண்டவனைப் பாடும் காலத்து வலக்கண்ணையும் பெற்றனர். இவர் சங்கிலியாரை மணந்ததைக் கேள்வியுற்ற பரவையார் இவரோடு கூடியிருக்க மறுத்தலும், இறைவனே தூது சென்று இருவருக்கும் உற்ற ஊடலைத் தவிர்த்தனர். பின்னர் இருவரும் வாழ்ந்திருந்த காலத்து, ஏயர்கோன் கலிக்காமநாயனார் என்

பவர், நம்பியாரூரர் இறைவனைத் தூது அனுப்பியது தகுதி அற்றது என்று கோபம் கொண்டிருத்தலை அறிந்து, இறைவன் அவ்விருவரையும் ஒற்றுமைப் படுத்தத் திருவுளங்கொண்டு அக்கலிக்காம நாயனாருக்குச் சூலை நோய் கொடுத்து அதை நம்பியாரூரரால் தீர்க்க எண்ணி நம்பியாரூரரை அங்கே போகும்படி ஏவுதலும், அதுகேட்ட கலிக்காம நாயனார் உடைவாளால் வயிற்றைக் கிழித்துக்கொண்டு இறந்தனர். அதுகண்ட நம்பியாரூரரும் "நானும் உயிர் துறப்பேன்" என்று உடைவாளை எடுத்தனர். பின்னர் இறைவன் திருவருளால் கலிக்காமரும் விழித்து எழுந்தவர் போல் உடனே எழுந்து நம்பியாரூரர் கையைப் பிடித்துக் கொண்டனர். அவ்விருவரும் அப்பொழுது நட்பினர் ஆயினர். பின்னர் சேரமண்டலத்தில் உள்ள சேரமான் பெருமாள் நாயனார் நம்பியாரூரருக்கு நட்பினர் ஆனதால் சேரமான் தோழர் என்று நம்பியாரூரருக்குப் பெயர் ஆயிற்று. இவ்விதம் பலதலங்களையும் நம்பியாரூரரும் சேரமான் பெருமாள் நாயனாரும் தரிசித்தனர். திருஐயாற்றில் வெள்ளம் விலகி வழிவிட்டு இவர்கட்குச் சுவாமி தரிசனம் செய்ய இடந் தந்தது. பிறகு நம்பியாரூரர் சேரமான் நாட்டிற்குச் சென்று அங்கு சிலகாலம் வசித்துப் பின்னர் ஆரூரரை நினைந்து திருவாரூரை வந்தடைந்தனர். சிலநாள் சென்ற பிறகு கொங்கு நாட்டை அடைந்து திருப்புக்கொளியூரில் சென்று அங்கே ஒரு வீதியில் இரண்டு வீடுகளில் ஒன்றில் மங்கல ஒலியும், மற்றதில் அழுகை ஒலியும் கேட்டு அழுகை ஒலிக்குக் காரணமாகிய முதலை விழுங்கிய பிள்ளையை வரவழைத்துக் கொடுத்தும், பின்னர் சேரமானிடத்துச் சென்று அங்கேயே சில நாளிருந்தும் வந்தனர். சேரமான் கொடுத்த பொருளையெல்லாம் திருமுருகன் பூண்டியில் இழந்து பிறகு "கொடுகுவெஞ்சிலை" என்னும் பதிகம் பாடி நம்பியாரூரர் பெற்றனர். இவ்விதமிருந்த நம்பியாரூரர் என்னும் சுந்தரமூர்த்தி நாயனார் திருவஞ்சைக்களத்துக்குச் சென்று சிவாலயத்தை வலம் வந்து உள்ளே புகுந்து சந்நிதானத்தில் விழுந்து வணங்கி எழுந்து நின்று, "ஆண்டவனே! அடியேனை உலக வாழ்க்கையினின்றும் நீக்கித் தேவரீர் திருவடியில் சேர்த்தல் வேண்டும்" என்னும் குறிப்போடு, "தலைக்குத் தலைமாலை" என்னும் திருப்பதிகம்

பாடினர். இறைவனும் வெள்ளையானையைத் தேவர்களோடு அனுப்பிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கைலாயத்திற்கு வரச் செய்தார். இதுகேட்ட சேரமான் பெருமாள் நாயனர் ஒரு குதிரையின்மீது ஏறி அக்குதிரையின் காதில் ஐந்தெழுத்தை ஓதிக் கைலாயத்திற்குச் சென்றனர். பரவையாரும், சங்கிலியாரும் முறையே கமலினி, அனிந்திதையாகிக் கயிலையை அடைந்தனர்.

தண்கயிலை யதுநீங்கி நாவ லூர்வாழ்
சைவனுர் சடையனுர் தனய னுராய்
மண்புகழ அருட்டுறையா னேலை காட்டி
மணம்விலக்க வன்றொண்டா யதிகை சேர்ந்து
நண்பினுட னருள்புரிய ஆரூர் மேவி
நலங்கிளரும் பரவைதோள் நயந்து வைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பி னுரே.

செப்பலருங் குண்டையூர் நெல்ல ளைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னுச் செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற் றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாதன்
ஒப்பில்தனித் தூதுவந்தா றாடு கிறி
யுறுமுதலை சிறுமதலை யுமிழ நல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற் சேர
வேந்தருடன் வடகயிலை மேவி னுரே.

இச்சரித்திரம், திருக்குறள் விளக்கம் ஆசிரியர் கி. குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது.

# மாணிக்கவாசக சுவாமிகள்

எழுதரு மறைகள் தேறா இறைவனை எல்லில் கங்குல்
பொழுதறு காலத் தோன்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க் கடிமை செய்வாம்.

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
**திருவா சகம்என்னும் தேன்.**

**த**ண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டிலே, மதுரையம் பதிக்கு ஏழு மைல் தூரத்திலே, வைகையாற்றங் கரையிலே, திருவாதவூரிலே, இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்து அறுநாற் றைம்பது ஆண்டுகட்கு முன்னர் அந்தணர் குலத்திலே மாணிக்க வாசக சுவாமிகள் என்னும் வாதவூரடிகள் தோன்றி யருளினார். இவர் வாதவூரர் என்ற பெயர் சூட்டப்பெற்று இளமையிலேயே எல்லாக் கலைகளையும் கற்று நல்லொழுக்கமுடையவராயினார். இவரது மேன்மையை அறிந்த அரிமர்த்தன பாண்டியன் என்ற அரசன் இவரைத் தனது முதல் மந்திரியாக்கித் "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டத்தையும் சிவிகை, குடை, கவரி முதலிய விருதுகளையும் திரண்ட செல்வத்தையும் இவருக்களித் தான். இவர் சில காலம் அறநெறி பிறழாது அமைச்சுரிமை செலுத்தி வந்தார். ஆயினும் அதில் பற்று வையாமல் சிவஞானம் தரவல்ல நல்லாசிரியனை வேண்டி நின்றார்.

ஒருநாள் ஆரிய வணிகர் கீழ்க் கடற்கரையில் நல்ல குதிரைகளை விற்பனைக்காகக் கொண்டுவந்துள்ள செய் தியை யறிந்த அரசன், மிகுந்த பொன்னைத் தந்து வாத வூரரைக் குதிரைகள் வாங்கி வரும்படி பரிசனங்களோடு அனுப்பினான். வாதவூரரும் கடினமான வழி பல கடந்து திருப் பெருந்துறையென்ற இடத்தை யடையும்போது ஆங்கொரு சோலையினின்றும் அரநாம முழக்கம் கடல்போன் றொலிப்பதைக் கேட்டார். ஆங்கு, சிவபெருமானார் மானுடச்சட்டை தாங்கி மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல வாதவூரருக்கு ஞானோப

தேசம் செய்யத் திருவுளங்கொண்டு ஒரு சிவயோகி வேடம்பூண்டு சிவகணங்கள் தமக்குச் சீடர்களாக வீற்றிருக்க, ஒரு குருந்தமரத் தடியில் அவர்கட்கு ஞானப் பொருள்களை விளக்கிக்கொண் டிருந்தார்.

இக்காட்சியைக் கண்ட வாதவூரர் 'தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருள் மூழ்கி' குருமூர்த்தியின் திருவடி களில் வீழ்ந்து தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினர். இதற் கென்றே வந்துள்ள குருமூர்த்தியும் வாதவூரருக்குத் திருநோக் கால் பரிசத்தால் திகழும் வாக்கால் ஞானதீக்கை செய்தருளினர். சிவஞானம் கைவரப் பெற்ற வாதவூரர் உள்ளக் கனிவொடு பல பாடல்களைத் தங்குருமீது பாடினர். குருந்தமேவிய குருநாதரும் இவர் பாடல்கள் அருளொளி வீசும் மாணிக்கவாசகமாக இருத் தலுக்கு மகிழ்ந்து வாதவூரருக்கு "மாணிக்கவாசகர்" என்ற தீக்ஷாநாமம் சூட்டினர். மாணிக்கவாசகரும் தமது உடல் பொருள் ஆவியாகிய மூன்றும், அரசன் தந்த பொருளும் இறை வன் உடைமைகளே யென்றும், அரசனும் தாமும் அடிமைகளே யென்றும் உணர்ந்து அவைகளை இறைவனுகிய குருமூர்த்திக்கே அர்ப்பணம் செய்தனர். இறைவனும் அப்பொருளைப் பெருந் துறையில் திருக்கோயில் பணித்து அடியவர்க் குதவுமாறு கட் டளையிட, அவ்வாறே செய்து உலகப் பொருள்களை நீத்துக் கோவண ஆடையும் திருநீறும் கொண்டு மெய்த் துறவியாகத் திருப்பெருந்துறையில் அமர்ந்திருந்தனர்.

பரிசனங்களால் இவற்றை யறிந்த பாண்டியன், உடனே தன்னிடம் வரும்படி ஒரு திருமுகம்விடுத்தான். மாணிக்கவாசகர் அத்திருமுகத்தைப் பொருட்படுத்த வில்லையாயினும் இறைவன் "நாம் ஆவணி மூலத்தில் குதிரைகளைக் கொண்டு வருவோம். நீ முன்னதாகச் செல். இம்மாணிக்கக் கல்லையும் அரசனிடம் கொடு" என்று கட்டளையிட்டு ஒரு மாணிக்கத்தையும் தர, அதைக் கொண்டு அரசனிடம் தந்து ஆவணி மூலத்தில் குதிரைகள் வரு மெனச்சொல்லி அரசனை மகிழ்வித்தார். ஆவணி மூலத்துக்கு இரண்டொரு நாள் முன்னர் வரை மதுரையின் பக்கலிலாவது பெருந்துறையிலாவது குதிரைப்படை யொன்றும் வரக்காணுத பாண்டியன், மாணிக்கவாசகர் தன்னை ஏமாற்றிப் பொய்யுரைத் தனரென்றெண்ணி அவரைச் சிறையிலிட்டுப் பலவகையாகத் துன்புறுத்தினன். சுவாமிகள் எம்பெருமானையே நினைந்து

" நன்றேசெய்வாய் பிழைசெய்வாய், நானோ இதற்கு நாயகமே" என்ற உறுதியோடு விளங்கினார்.

ஆவணி மூலத்தன்று காலையில் குதிரைகள் வந்தன. ஆலவாய்க் கடவுளும் குதிரைச் சேவகனாக வந்தான். பாண்டியன் மனமகிழ்ந்து மாணிக்கவாசகரைச் சிறையிலிருந்து விடுவித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். இறைவன் திருவிளையாடலால் நரிகளே குதிரைகளாக வந்தன. அன்றிரவே மீண்டும் அவைகள் நரிகளாயின. பாண்டியன் சினம் மிகுந்தவனாய் மாணிக்கவாசகரை மீண்டும் துன்புறுத்தினான்; உச்சி வேளையில் சுடுகின்ற வைகை மணல் நடுவே நிறுத்தினான். உடனே இறைவன் கருணைகூர்ந்து வைகையில் பெருவெள்ளத்தை நிரப்பினான். வெள்ளம் கரைகளையுடைத்து மதுரைக்குள் பாய்ந்தது. மாணிக்கவாசகப்பெரியாரைத் துன்புறுத்துவதால் இக்கேடு வந்ததென அமைச்சர் சிலரால் அரசன் உணர்ந்து, அவரை விடுவித்து வணங்கி வெள்ளத்தைத் தடுத்து அருள்புரியுமாறு வேண்டினான். அவரும் கரையிற் செல்லவும் வெள்ளப்பெருக்கு நின்றது. உடைப்புக்களை யடைத்தற்கு மதுரையின் குடிகளிடம் கட்டளையிட்டு மாணிக்கவாசகர் பிட்டை கூடியிருந்தார்.

எல்லா உடைப்புக்களும் அடைபட்டன. வந்தியென்ற கிழவியின் பங்குமட்டும் அடைபடவில்லை. இறைவனே அவளுக்குக் கூலியாளாக வந்து அவள் தந்த பிட்டை யுண்டு வேலை செய்யாமல் திருவிளையாடல் புரிந்தான். அரசன் வந்தியின் ஆள் வேலை செய்யாததை யுணர்ந்து அவனைப் பிரம்பாலடிக்கவும், அரசன், தேவர், மனிதர் முதலிய எல்லா உயிர்கள் முதுகிலும் அந்த அடிபட்டது. ஆளும் மறையவே, பாண்டியன் இத்திருவிளையாடலையும் மாணிக்கவாசகர் பெருமையையும் நன்குணர்ந்து அவரை வணங்கினான். மாணிக்கவாசகர் அமைச்சர் பதவியை நீத்துத் திருப்பெருந்துறை சென்றார்.

ஆங்கு மீண்டும் குருந்தமேவிய குரவரையும் குழாங்களையும் கண்டார். இறைவனும் ஆங்குள்ள குளத்தில் தோன்றும் சோதியுட் கலக்கும்படி குழாங்கட்கும், பல தலங்களையும் வணங்கி "நலமலி தில்லையுள், கோலமார்தரு பொதுவினில் வருகென" மாணிக்கவாசகருக்கும் கட்டளையிட்டு மறைந்தான். குழாங்களும் சோதியிற் கலந்தன. வாதவூரடிகள் உத்தரகோசமங்கை, இடைமருது, அண்ணாமலை, கழுக்குன்றம், காஞ்சி

முதலிய பல தலங்களை வணங்கித் திருவாசகப் பாடல்களைப் பாடித் தில்லையில் வந்து திருக்கூத்தனை வணங்கி ஊருக்குப் புறம்பே ஓரிடத்தில் வசித்து வந்தார்.

சிவனடியார் ஒருவர் ஈழநாட்டில் "பொன்னம்பலம்" என்று கூறி யிரந்துண்டு வந்தார். இதைக் கண்ட புத்தர்கள் பொருத வர்களாய்த் தமது மன்னனிடம் தெரிவித்தனர். அரசன் அவ்வடி யாரைத் தருவித்து, "பொன்னம்பலம்" என்பதன் வரலாற்றை யறிந்து தனது குருவோடும் ஊமைப்பெண்ணோடும் தில்லைப் பொன்னம்பலம் சென்று புத்ததேவரை ஆங்கு நிலைநாட்டும் உறுதி கொண்டு புறப்பட்டுத் தில்லையை யடைந்தான். புத்த குருவும் தில்லையிலுள்ளாரை வாதுக்கழைத்தான். இறைவன் தில்லை வாழந்தணர்கட்குக் கனவில் மாணிக்கவாசகரைக் கொண்டு புத்தரை வாதில் வெல்லுமாறு கட்டளையிடலும், மாணிக்க வாசகரும் சிற்சபையில் சோழமன்னனும் அந்தணரும் அறிஞரும் அமர்ந்திருக்க புத்த குருவை நோக்கி "உன் வாதம் என்னை?" யென வினவினார். அவன் தனது கொள்கைகளைக் கூறவே, இவர் சைவ உண்மையை எடுத்துரைத்து, புத்த வாதத்தை மறுத்தார். புத்த குரு இதையுணராது, மீண்டும் தனது வாதத்தையே உரைக்க, மாணிக்கவாசகர் இறைவன் திருவருளை நினைந்தார். உடனே கலைமகள் புத்தர் வாக்கினின்றும் அகன்று அவர்களை யெல்லாம் ஊமர்களாக்கினாள். உடனே புத்த அரசன் "பேசுவாரை ஊமர் களாக்கினீர், என் ஊமை மகளைப் பேசவைத்தால் நானும் என் நாடும் சைவத்தை மேற்கொள்ளத் தடையில்லை" யென் றான். மாணிக்கவாசகர் அப்பெண்ணைப் பல கேள்விகள் கேட்க, அவைகட்குப் பிறவி ஊமையான அப்பெண் வாயால் பேசிப் பதில் கூறினாள். (இவற்றைத் தொகுத்து சுவாமிகள் "திருச் சாழல்" என்று அருளிச் செய்தார்.) பிறகு புத்த மன்னன் சைவனாயினான். அவன்வேண்ட சுவாமிகள் அருள் கூர்ந்து வாதுசெய்த புத்த ஊமர்களைப் பேசச் செய்தார். அனைவரும் சைவராயினர்.

பிறகு சிலகாலங் கழிந்த பின்னர், இறைவனே ஓரந்தண வுருக்கொண்டு, மாணிக்கவாசகரிடம் சென்று, தான் பாண்டி நாட்டிலிருந்து வந்ததாகக் கூறித் திருவாசகம் முழுமையும் சுவாமி கள் சொல்ல, ஏடும் எழுத்தாணியுங் கொண்டு எழுதி, அகப் பொருட்கோவை சொல்ல வேண்டுமென்று கூறலும், சுவாமிகள்

சொல்ல அதையும் எழுதிக்கொண்டு " மாணிக்கவாசகன் சொல்ல அழகிய திருச்சிற்றம்பல முடையார் எழுதியது" என்று கைச் சாத்திட்டு, சிற்சபையின் பஞ்சாக்கரப்படியிலே ஒருவருங் காணாத வாறு வைத்தனன். தில்லைவாழந்தணர் இவ்வேட்டை மாணிக்க வாசகருக்குக் காட்டி, இப்பாடல்களின் பொருளைத் தெரிவிக்க வேண்டினர். மாணிக்கவாசகரும் அவர்களை அழைத்துச் சென்று தில்லைத்திருக்கூத்தனைச் சுட்டி இவனே பொருளெனக்காட்டி அவன் திருவடியில் ஆனிமா மகத்திலே இரண்டறக் கலந்தனர்.

## ஆராய்ச்சிக் குறிப்புகள்

*(1)* **அடிகள் காலம்** :—இது கி. பி. மூன்றும் நூற்றுண்டு என்பது பலரும் ஒப்பமுடிந்த கொள்கை. அடிகள் ஏனைய மூன்று சமய குரவர்க்கும் முற்பட்டவரென்பதே பழைய வர லாறுகளிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது. சில ஆண்டு கட்கு முன் சில அறிஞர்கள் திருத்தொண்டத் தொகையில் அடிகள் கூறப்படாமை, ஒன்பதாம் நூற்றுண்டிலிருந்த வர குணனை அடிகள் திருக்கோவையார் ௩௦௬, ௩௨௭-வது பாடல் களிற் கூறியுள்ளமை, மாயாவாதம் மும்மலம் ஆகமம் முதலிய சொற்களை அடிகள் உபயோகித்துள்ளமை, அடிகள் அருளிய செய்யுள் வகைகள் (கோவை, சதகம், அம்மானை, விருத்தம் முதலியன), " கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்," " ஒரு தோழன் தொண்டருளன் " என்று அடிகள் கூறினமை சம்பந் தரையும் சுந்தரரையும் குறிக்கும் என்பன போன்ற காரணங்கள் கூறி, அடிகள் காலம் கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற் றுண்டென்கின்றனர். இக்காரணங்களை யெல்லாம் நன்காய்ந்து. கல்லாடத்தில் அடிகள் வரலாறுண்மை, "குடமுழ நந்தீசனை வாசகனைக் கொண்டார்" "நரியைக் குதிரை செய்வானும்", " அணியார் வையைத் திருக்கோட்டி னின்றதோர் திறமுந் தோன்றும் " என்ற அப்பர் வாக்குகள் அடிகள் வரலாற்றைக் குறிக்கின்றமை, மூன்றும் நூற்றுண்டில் மலையாளச் செப்புப் பட்டய மொன்றில் அடிகள் இந்திய கிறிஸ்தவரை மீண்டும் சைவராக்கிய செய்தி கூறப்பட்டமை, அடிகள் புத்தரை வாதில் வென்றதை இலங்கையிலுள்ள மகாவமிசம் என்ற சரித்திர நூல்

கூறுதல் முதலிய பல காரணங்கள் காட்டி உயர் திருவாளர்கள் மறைமலையடிகள், கா. சுப்பிரமணியம் பிள்ளை, சி. கே. சுப்பிரமணிய முதலியார் ஆகிய மூன்று பேரறிஞர்களும் முறையே தங்கள் "மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்", "மாணிக்கவாசகர் சரித்திரம்", "மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை" என்ற உரைநடை நூல்களில் தாபித்துள்ளார்கள். அடிகள் ஏனைய மூன்று சமய குரவர்க்கும் முற்பட்டு கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தவ ரென்பதே ஆராய்ச்சியில் துலங்கும் முடிபாகும்.

(2) **அடிகள் குலம்** :—இது ஆதிசைவ குலமென்று வடமொழி ஆலாஸ்ய மஹாத்மியமும், ஆமாத்திய குலமென்று ஏனைய பல வரலாறுகளும், ஐக்கியவாத சைவக் கன்னர ஆராத்தியப் பிராமண குலமென்று சில நவீன ஆராய்ச்சி முடிபுகளும் கூறுகின்றன.

(3) **அடிகள் சமயம்** :—அடிகள் சைவ சித்தாந்த சமயகுரவருள் ஒருவர் என்று சைவ சித்தாந்திகளும் ஐக்கியவாதி என்று அடிகளை ஆராத்திய குலத்தவராக் கொள்வோரும் கூறுகின்றனர். பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு சாத்திரங்களையும் வகுத்த பெரியார்கள் கொள்கையே அறிவுக்குப் பொருத்தமுடையதாம்.

(4) **அடிகள் முற்பிறவி** :—கயிலையில் கணநாதரா யிருந்தாரென்று திருவாலவாயுடையார் புராணம் கூறும். "குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டார்" என்ற அப்பர் வாக்கும், "நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகைக் குரம்பையிற் புகப்பெய்து" என்ற அடிகள் வாக்கும் இதைக் குறிக்கும் என்பர் சிலர். கயிலைச் சாரலில் சித்தராயிருந்து கவனக் குளிகையை யிழந்து பூமிக்கு வந்து பாண்டியன் பொருளைச் சிவதர்மத்துக் காக்குதல் முதலியன நிகழ்த்தி மீண்டனர் என்றும் சில புராணங்கள் கூறும்.

(5) **அடிகள் தாய் தந்தையர்** :—தாயின் பெயர் சிவஞானவதியென்று மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய திருப்பெருந்துறைப் புராணம் கூறும். தந்தை பெயர் சம்புபாதாசாரியார் என்று அப்புராணமும் சுந்தரநாதர் என்று வடமொழி ஆலாஸ்யமும் கூறும். ஏனைய புராணங்களில் இவர்கள் பெயர்கள் காணப்படவில்லை.

**(6) அடிகளுக்கு மனைவி மக்களுண்டா? :—** "முடித்தவாறும் ...இங்கொருத்தி வாய், துடித்தவாறுந் துகிலிறையே சோர்ந்த வாறும்........" (திருச்சதகம்-௩௪) என்ற அடிகள் வாக்கு முதலியன கொண்டு மறைமலையடிகள் வாதவூரடிகட்கு மனைவி மக்களுண்டென்கிறார்கள். ஏனைய அறிஞர்களிற் சிலர் இதை மறுத்தும் பலர் வாளாவிருந்தும் வேறுபடுகின்றனர். பழைய புராண வரலாறுகளில் ஒன்றும் கூறப்படவில்லை.

**(7) அடிகள் பாண்டியன் பொருளைச் செலவிட்டதும் புத்தரை ஊமராக்கி வாதில் வென்றதும் அறச் செயல்களா? :—** இவைகள் அறச் செயல்களே யென்று மேலே கூறிய மூன்று உரை நடை நூல்களிலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

**(8) அடிகள் எந்தெந்த பாடல்களை எங்கெங்கு எவ்வெப் போது பாடினர் :—** வாதவூரடிகள் தமது வாழ்க்கையில் எவ்வெக் காலங்களில் எவ்வெச் சந்தர்ப்பங்களில் எவ்வெப் பாடல்களைப் பாடியருளினர் என்பது ஆராய்தற்குரிய பொருளாகும். இதைப் பற்றிக் கடவுள் மாமுனிவருக்கும் பெரும்பற்றப் புலியூர் நம்பிகளுக்கும் கருத்து வேற்றுமை நிரம்பவுண்டு. முதலிற் கடவுள் மாமுனிவர் தமது வாதவூரடிகள் புராணத்துட் கூறும் முறையை விரிப்பாம்.

**கடவுள் மாமுனிவர் முறை :**

நரி பரியாக்கிய திருவிளையாடல், மண்சுமந்த திருவிளையாடல் முடியும்வரையில் வாதவூரடிகள் எப்பாடலும் அருளிச்செய்திலர். அரசன் வாதவூரரிடம் மன்னிப்புப் பெற்றுக்கொண்டு அவர் திருப்பெருந்துறைக்குச் சென்று இறைபணி புரிந்து வாழ அவருக்கு இறுதியாக விடை தந்தனன். வாதவூரர் பெருந்துறை சேர்ந்து குருமூர்த்தியைக் கண்டனர். குருமூர்த்தியார் "நீ இங்கேயே இருப்பாயாக. இப்பொய்கையில் சோதி தோன்றும். அதில் ஏனைய சீடர்கள் மூழ்குவர். நீமட்டும் இங்கே யிருந்து, பிறகு உத்தர கோசமங்கை சென்று அட்டமாசித்திகள் பெற்றுப் பல தலங்கள் சென்று இறுதியில் சிதம்பரம் சேர்ந்து புத்தரை வாதில் வென்று ஆங்கேயே எம்திருவடி சேர்வாய்" என்று கட்டளையிட்டு மறைந்தனர். வாதவூரர் குருந்தமர நிழலில் தெய்வப்பீடம் அமைத்துக் குருமூர்த்தியின் திருவடிகளை யிருத்திப் பூசித்து வந்தனர். இவ்வாறிருக்கும் நாளில் சிவபுராணம், அற்புதப்பத்து, அதிசயப்

பத்து முதலிய இருபது பதிகங்களை அருளிச் செய்தார். பிறகு பொய்கையில் தீ தோன்றிற்று. அடியவரெல்லாம் ஐந்தெழுத் தோதித் தீக்குளித்து மறைந்தனர். வாதவூரர் மிக வருந்தித் திருச்சதகம் பாடிப் பின் உத்தரகோசமங்கை சென்று நீத்தல் விண்ணப்பம் பாடினார். பிறகு இடைமருதைத் தரிசித்து ஆரூர், சீகாழி சென்று பாடிப் பல தலங்கள் தொழுதுத் திருவண்ணா மலையில் மார்கழி மாதத்தில் பெண்கள் நீராடத்துயிலெழுப்பிச் செல்வதைக் கண்டும் பெண்கள் அம்மானை ஆடுவது கண்டும் திருவெம்பாவை, திருஅம்மானை பாடிக் கழுக்குன்றை யடைந்து பிறகு சிதம்பரம் சென்று குருமூர்த்தியின் திருவுருவங் கண்டு தில்லையின் வீதிகளில் வலம்வரும்போது கீர்த்தித் திருவகவல் முதலியன பாடி, ஆங்கு பெண்கள் பொற்சுண்ணம் இடித்தல் கண்டு பாடிப் பின்பு திருத்தெள்ளேணம், திருத்தோணோக்கம் முதலியன பாடி ஒரு பர்ணசாலை யமைத்துத் தில்லையிலிருந்த னர். பின்பு புத்தரை வாதில் வென்று ஊமை அரச குமாரியைப் பேச வைத்து வாதின் சாரத்தைத் திருச்சாழலில் அமைத்தருளி னர். பிறகு தில்லையிலேயே பல பதிகங்களைப் பாடித் தில்லைக் கூத்தன் எழுதியருளத் திருவாசகம் முழுமையும் பாடிப் பாவை பாடிய வாயால் கோவையும் பாடித் தில்லை மூவாயிரவரெதிரே தில்லைக்கூத்தன் திருவுருவுள் ஐக்கியமாயினர். பண்டாய நான் மறை பற்றி இப்புராணத்துள் எதுவுங் காணப்படவில்லை. திரு வெண்பாவின் பாடற்றொகை திகழெழு நான்கென்றுளது.

இனி பெரும்பற்றப்புலியூர் நம்பிகள் இயற்றிய திருவாலவா யுடையார் திருவிளையாடற் புராணத்துட் காணும் சரிதமுறையை ஆராய்வாம்.

**பெரும்பற்றப்புலியூர் நம்பிகள் முறை :**

திருப்பெருந்துறையில் அருளியவை:—குருமூர்த்தி மாணிக்க வாசகரைப் பாடும்படி சொன்னபோது அற்புதப்பத்து, சென்னிப்பத்து, அச்சோப்பதிகம் பாடினார். பின்னர், சற்குரு சுட்டிக் காட்டிய மாணாக்கர்களை நோக்கி அதிசயப்பத்து செய்தார். ஞானகுரு மறைந்தருளிய பொழுதும் பிறகும் செத்திலாப்பத்து, ஆசைப்பத்து முதலியன பாடினார். பிறகு திருப்பெருந்துறை நகருட் சென்று அங்கு நிகழ்ந்தவற்றைக் கண்டபோது அம்மானை, கோத்தும்பி முதலியன அருளினார். பாண்டியனிட

மிருந்து திருமுகம் வந்தபோது கோயிலுட் சென்று முறையிடுங் காலத்துத் திருப்பள்ளியெழுச்சி ஓதியருளினூர்.

**மதுரையில் அருளியவை** :—குறித்த நாளில் குதிரைகள் வாராமை கண்டு குழைத்தபத்தும் அருட்பத்தும் பாடினூர். குதிரைகள் வாராமையால் அரசனூல் சிறையிலிடப்பட்டபோது அடைக்கலப்பத்து அருளினூர். சிறைக்கு அண்மையிலுள்ள மரத்திலிருந்த குயிலைப் பார்த்துக் குயிற்பத்தைச் செய்தார். குதிரைகள்மீது வரக்கண்ட வணிகரைப் பார்த்து மதுரை நகரத்து மகளிர் கூறியதாக அன்னைப்பத்தை அருளினூர். குதிரைப் பாகர்க்குப் பாண்டியன் பரிசளித்தபோது பிடித்தபத்தை ஓதினூர். பரிகளெல்லாம் நரிகளாக மாறினபோது திருவேசறவைச் சொன்னூர். பாண்டியன் அவரைச் செல்லும்படி இறுதியாக விடை தந்தபோது சிவபுராணத்தைச் செய்தார்.

திரு உத்தரகோசமங்கையில் நீத்தல் விண்ணப்பத்தையும், திருக்கழுக்குன்றத்தில் கழுக்குன்றப் பதிகத்தையும் அருளினூர். மேற்சொன்னவை போக மிகுந்த 18 பதிகங்களைப்பற்றி, பெரும்பற்றப்புலியூர் நம்பிகள் யாதும் வெளிப்படையாகக் கூறவில்லை. இவ்விவரங்களையெல்லாம் திருவாசகம் பல ஆராய்ச்சி அகராதிகளுடன் வெளிவந்துள்ள சமாஜப் பதிப்பிற் காண்க.

(9) **அடிகள் திருக்கோவை பாடினரா?** :—பழைய வரலாறுகளும் மேற்கூறிய மூன்று நூல்களும் அடிகள் பாடியதாகவே கூறுகின்றன. சில ஆராய்ச்சியாளர் திருவாசகத்தை நோக்கத் திருக்கோவை சிறுமையுடையதென்றும், திருக்கோவைஇயற்றிய சிவபாத்தியர் அடிகளல்லரென்றும் கூறுகின்றனர். அடிகள் கி. பி. க0-ம் நூற்றூண்டினரென்போர் வரகுணன் செய்தி, செய்யுளமைப்பு முதலியவைகட்காக அடிகள் கோவை இயற்றினரென்பதை ஒப்புக் கொள்கின்றனர்.

(10) **அடிகள் திருவாக்கு** :—இதில் அடிகள் வரலாற்றுக்குரிய அகச்சான்றுகள் நிரம்பியுள்ளன. "எங்கள் திருப்பெருந்துறை மேவினூன், காயத்துள் அமுதூறவூற நீகண்டு கொள் என்று காட்டிய, சேய மாமலர்ச் சேவடி", "நாயினேன் நலமலி தில்லையுள், கோலமார்தரு பொதுவினில் வருகென", "நரியைக் குதிரைப் பரியாக்கி...மதுரையெல்லாம் பிச்சதேற்றும்...", "மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவான் மொத்துண்டு, புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானூய்" என்பனபோன்ற பல

பகுதிகளில் இச்சான்றுகள் அமைந்துள்ளன. பதியிலக்கணம், பாச இலக்கணம், பசுவிலக்கணம், பசுத்தன்மை கெடுதல், குருவின் உபகாரம், இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், அடியாரிலக்கணம் முதலிய பல சைவசித்தாந்த சாத்திரப் பகுதிகட்கும் அடிகள் திருவாக்கில் ஆதாரங்கள் பலவுள. நயங்கள், அணிகள், உவமைகள், சுவைகள், பழமொழிகள் முதலியன அடிகள் வாக்கில் செறிந்துள்ளன. இயற்கைப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் கடவுள் வடிவாகவும் சத்தி சிவமயமாகவும் உவமித்து விவரித்தலில் அடிகள் வல்லுநர். விளையாடல்களில் கடவுளுணர்ச்சியைப் புகுத்திப் பூவல்லி, அம்மானை, கோத்தும்பி போன்ற பாடல்களைப் பாடுவதிலும் அடிகளை ஒப்பாரிலர். சுருங்கக் கூறின் அடிகள் திருவாக்கு மெய்யுணர்வையும், உள்ளக் கனிவையும், முத்தியையும் நல்கும் பெற்றியுடையதென்று கூறலாம்.

செய்யதிரு வாதவூர் வந்தருளி யமைச்சரெனச் சிறந்து நீடு
வையமிசை வழுதிநிதி கொண்டரனைக் குருந்தடியில் வணங்கிஞாலம்
உய்யவருட் பணியாற்றி நரிபரியாச் செய்துநதி யுடைப்பி லெங்கள்
ஐயன்முடி மிசையுவந்து மண்சுமக்க அன்பினுரு வாயி னரே.

எங்குமா கியஅழகன் மேனிபிரம் படிதாங்க ஏங்கிப் புத்தர்
மங்கவா ரருள்செய்து மூகைபே சிடவழங்கி மணிமன் றுடும்
எங்கள்நா யகன்கரத்தால் ஏடுமெழுத் தாணியுங்கொண் டெழுதப்பாடி
அங்கண்மே வியசோதி தன்னிலிரண் டறக்கூடி யமர்ந்திட் டாரே.

இச்சரித்திரமும் ஆராய்ச்சிக் குறிப்புகளும் **திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார்,** பி. ஏ., பி. எல். அவர்களால் எழுதப்பட்டன.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# அற்புதத் தேவாரத் திரட்டு

## திருஞானசம்பந்தர் அற்புதப் பதிகங்கள்

திருச்சிற்றம்பலம்*

### ஞானப்பால் தந்தவரைக் காட்டியது

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தலெளிதாமே.

### பொற்றாளம் பெற்றது

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ.

நலங்கொள் காழி ஞான சம்பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே.

### முத்துச்சிவிகை பெற்றது

எந்தை யீசனெம் பெருமா னேறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயி லரத்துறை யடிகள்தம் மருளே.

---

*ஒவ்வொரு பதிகத்தின் முதலிலும் முடிவிலும் "திருச்சிற்றம்பலம்" என்று ஓதவும்.

கறையி னூர்பொழில் சூழ்ந்த காழியுள் ஞானசம் பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த அரத்துறை யடிகள்தம் மருளை
முறைமை யாற்சொன்ன பாடல் மொழியும் மாந்தர்தம் வினைபோய்ப்
பறையு மையுற வில்லைப் பாட்டிவை பத்தும்வல் லார்க்கே.

ஐந்தெழுத்தின் பொருள் கூறியது

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
அற்றமில் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே.

முயலகன் தீர்த்தது

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்து பாச்சிலாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்மாண்பே.

அகமலியன்பொடு தொண்டர்வணங்க ஆச்சிரா மத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய புனிதர்கொ லாமிவரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தருகாழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலிதண்டமிழ் கொண்டிவையேத்தச் சாரகிலா வினைதானே.

விஷசுரம் தீர்த்தது

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகி லிமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே.

முத்துப்பந்தர் பெற்றது

பாடல்மறைசூடல்மதி பல்வளையொர் பாகமதில் மூன்றொர்கணையால்
கூடஎரி யூட்டியெழில் காட்டிநிழல் கூட்டுபொழில் சூழ்பழையையுள்

மாடமழ பாடியுறை பட்டிசரம் மேயகடி கட்டரவினர்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி காட்டிவினை வீடுமவரே.

மந்தமலி சோலைமழ பாடிநகர் நீடுபழை யாறையதனுள்
பந்தமுயர் வீடுநல பட்டிசர மேயபடர் புன்சடையனை
அந்தணமறை யோரினிது வாழ்புகலி ஞானசம் பந்தனணியார்
செந்தமிழ்கள்கொண்டினிதுசெப்பவலதொண்டர்வினை நிற்பதிலவே.

பொற்கிழி பெற்றது

இடரினுந் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழல் தொழுதெழுவேன்
கடல்தனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே.

அலைபுன லாவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்மிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர் நிலமிசை நிலையிலரே.

யாழ்முரி பாடியது

மாதர்ம டப்பிடியும் மட அன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மகள் துணையென மகிழ்வர்
பூதஇ னப்படைநின் றிசை பாடவு மாடுவர்
அவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயங் குமலர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே.

பொன்னெடு நன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலி
பொரூஉ புனல் திரூஉ வமர் புகலியென் றுலகில்
தன்னொடு நேர்பிறவில் பதி ஞானசம் பந்தனஃ
துசெந் தமிழ்த் தடங் கடல் தருமபுரம்பதியைப்
பின்னெடு வார்சடையிற் பிறை யும்மர வும்முடை
யவன் பிணை துணை கழல் கள்பேணுத லுரியார்
இன்னெடு நன்னுலகெய் துவ ரெய்திய போகமும்
உறு வர்கள் ளிடர் பிணி துயரணைவ் விலரே.

### விடம் தீர்த்தது

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே.

வயஞா னம்வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்
இயன்ஞா னசம்பந் தனபா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே.

### வாசிதீரக் காசு பெற்றது

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே.
காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழு மொழிகளே.

### மறைக்கதவை மூடியது

சதுரம் மறைதான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க வெனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே.

காழிந் நகரான் கலைஞா னசம்பந்தன்
வாழிம் மறைக்கா டனைவாய்ந் தறிவித்த
ஏழின் னிசைமா லையீரைந் திவைவல்லார்
வாழி யுலகோர் தொழவா னடைவாரே.

### கோள்அறு பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி, மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தெ னுளமே புகுந்த அதனால், ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே, ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி வளர் செம்பொ னெங்கும் நிகழ, நான்முக னாதியாய பிரமா புரத்து மறை ஞான ஞான முனிவன், தானுறு கோளுநாளு மடியாரை வந்து நலியாத வண்ண முரைசெய், ஆனசொல் மாலையோது மடியார்கள் வானில் அரசாள்வ ராணை நமதே.

அமணரிட்ட தீயைச் சுரமாக்கியது

செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே.

அப்ப னாலவா யாதி யருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்த னுரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே.

வாதுசெய்ய விடை கேட்டது

காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடை யாயுரை செய்வனான்
வேட்டு வேள்விசெய் யாஅமண் கையரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே.

செந்தெ னாமுரா லுந்திரு ஆலவாய்
மைந்த னேயென்று வல்லம ணாசறச்
சந்த மார்தமிழ் கேட்டமெய்ஞ் ஞானசம்
பந்தன் சொற்பக ரும்பழி நீங்கவே.

வாதுசெய்ய விடைபெற்றது

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே.

கூட லாலவாய்க் கோனை விடைகொண்டு
வாடல் மேனி யமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தஇப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே.

பாண்டியன் சுரந்தீர்த்தது

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு.
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

பச்சைப் பதிகம்

போகமார்த்த பூண்முலையாள் தன்னொடும்பொன் னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள்ளேற் றண்ணல்பர மேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவணஆ டையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயதுநள் ளாறே.

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கியதாழ் சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம்பந் தன்நல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்துமிவை வல்லார்
உண்புநீங்கி வானவரோ டுலகிலுறை வாரே.

ஏட்டைத் தீயிலிட்டது

தளிரிள வளரொளி தனதெழில் தருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தம் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.

சிற்றிடை யரிவைதன் வனமுலை யிணையொடு செறிதரும்
நற்றிற முறுகழு மலநகர் ஞானசம் பந்தன்
கொற்றவ னெதிரிடை யெரியினி லிடஇவை கூறிய
சொற்றெரி யொருபது மறிபவர் துயரிலர் தூயரே.

ஏட்டை ஆற்றிலிட்டது

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தன் நல்ல
எல்லார் களும்பரவு மீசனை யேத்து பாடல்
பல்லார் களும்மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே.

### ஓடம் விட்டது

கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்
நட்ட மாடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

கொன்றைசேர் சடையான் கொள்ளம் பூதூர்
நன்று காழியுள் ஞானசம் பந்தன்
இன்றுசொன் மாலைகொண் டேத்தவல் லார்போய்
என்றும் வானவ ரோடிருப் பாரே.

### ஆண்பனை பெண்பனையாக்கியது

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே.

குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுள் ஞானசம்பந் தன்சொல்
விரும்பு வார்வினை வீடே.

### எலும்பைப் பெண்ணாக்கியது

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்தன் நலம்புகழ்ந்த பத்தும்வலார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே.

### ஐக்கியப் பதிகம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே.

நறும்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை

உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவ மவல மிலரே.

நமச்சிவாயப் பதிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே.

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்

---

## திருநாவுக்கரசு சுவாமிகள்
## அற்புதப் பதிகங்கள்

திருச்சிற்றம்பலம்

சூலை நோய் தீர்ந்தது

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிரவும்பகலும் பிரியாதுவணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில வீரட்டா னத்துறை யம்மானே.

போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த வதுகருதாய்
வேர்த்தும்புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

பல்லவற்கு மறுமாற்றந் தந்தது

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம், ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம் இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை, தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்,

கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க் கொய்ம்மலர்ச்சே வடி-யிணையே குறுகி னோமே.

நாவார நம்பனையே பாடப் பெற்றோம் நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம், ஆவாஎன் றெமையாள்வான் அமரர் நாதன் அயனொடுமாற் கறிவரிய அனலாய் நீண்ட, தேவாதி தேவன் சிவனென் சிந்தை சேர்ந்திருந்தான் தென்திசைக்கோன் தானே வந்து, கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலுங் குணமாகக் கொள்ளோமெண் குணத்து ளோமே.

நீற்றறையின் குளிர்ச்சியை வியந்தது

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

கோல்யானைக்கு அஞ்சோம் என்றது

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.

நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை
உரங்களெல் லாங்கொண் டெடுத்தான் ஒன்பதும் ஒன்றும் அலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.

கல் மிதக்கப் பாடிய நமச்சிவாயப் பதிகம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.

இடபக்குறி சூலக்குறி பொறிக்கப்பெற்றது

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே.

கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலையுற்றான்
படவுந் திருவிரல் ஒன்றுவைத் தாய்பனி மால்வரைபோல்
இடபம் பொறித்தென்னை ஏன்றுகொள் ளாயிருஞ் சோலைதிங்கள்
தடவுங் கடந்தையுள் தூங்கானை மாடத்தெந் தத்துவனே.

திருவடி சூட்டப் பெற்றது

கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண் டாய்முழுங் குந்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

பொறித்தேர் அரக்கன் பொருப்பெடுப் புற்றவன் பொன்முடிதோள்
இறத்தாள் ஒருவிரல் ஊன்றிட் டலற இறங்கிஒள்வாள்
குறித்தே கொடுத்தாய் கொடியேன் செய்குற்றக் கொடுவினைநோய்
செறுத்தாய் திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

விடந் தீர்த்தது

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே.

பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாமெயி றுந்நெறிந் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்தலை
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே.

மறைக்கதவு திறக்கப் பாடியது

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ

கண்ணி னுலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

அரக்க னைவிர லால்அடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே.

அமணர் மறைத்த இலிங்கத்தை வெளிப்படுத்தியது

தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னன்மறைத் தான்மறைக் கொண்ணுமே
அலையி னூர்பொழி லாறை வடதளி
நிலையி னனடி யேநினைந் துய்ம்மினே.

செருத்த னைச்செயும் சேணரக் கன்னுடல்
எருத்தி றவிர லாலிறை யூன்றிய
அருத்த னைப்பழை யாறை வடதளித்
திருத்த னைத்தொழு வார்வினை தேயுமே.

கயிலாயக் காட்சி கண்குளிரப் பெற்றது

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுப டாமல் ஐயா றடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததொர் காலங் காண்பான் கடைக்கணிக் கின்றேன்
அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது
இளமண நாகு தழுவி ஏறு வருவன கண்டேன்.
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

ஐக்கியப் பதிகம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால், கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன் கழலடியே கைதொழுது காணின் அல்லால், ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய் ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன், புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம் உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற, இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக், கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன் கடுந்தேர்மீ தோடாமைக் காலற் செற்ற, பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

திருச்சிற்றம்பலம்

---

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அற்புதப் பதிகங்கள்

திருச்சிற்றம்பலம்

### ஓலைகாட்டி ஆட்கொண்டது

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே.

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்(கு) ஆளல்லேனென லாமே.

### திருவடி தீக்ஷை பெற்றது

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவின் உரியானைக் கரிகாட்டில் ஆடல்
உடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்(து)
எம்மான்றன் அடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட் டானத்(து)
உறைவானை இறைபோதும் இகழ்வன்போல் யானே.

என்பினையே கலனாக அணிந்தானை யெங்கள்
எருதேறும் பெருமானை இசைஞானி சிறுவன்
வன்பனைய வளர்பொழில்சூழ் வயல்நாவ லூர்க்கோன்
வன்றொண்டன் ஆரூரன் மதியாது சொன்ன
அன்பனை யாவர்க்கும் அறிவரிய அத்தர்
பெருமானை அதிகைமா நகருள் வாழ்பவனை
என்பொன்னை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போல் யானே.

திருத்தொண்டத்தொகை பாடியது

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கு மடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூர னடிமைகேட்(டு) உவப்பார்
ஆரூரி லம்மானுக் கன்பரா வாரே.

குண்டையூர்நெல்லை எடுப்பித்தது

நீள நினைந்தடியேன் உமைநித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமா னவையட்டித் தரப்பணியே.

கொல்லை வளம்புறவிற் றிருக்கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவுந் திருநாவல வூரனவன்
நெல்லிட ஆட்கள்வேண்டி நினைந்தேத்திய பத்தும்வல்லார்
அல்லல் களைந்துலகின் அண்டர்வானுல காள்பவரே.

செங்கல் பொன்னாகியது

தம்மையே புகழ்ந்(து) இச்சை பேசினுஞ் சார்வினுந் தொண்டர் தருகிலாப், பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள், இம்மையேதரும் சோறுங்கூறையும் ஏத்தலாம்இடர் கெடலுமாம், அம்மையேசிவ லோகம்ஆள்வதற்(கு) யாதும்ஐயுற வில்லையே.

செறுவினிற்செழுங் கமலமோங்குதென் புகலூர்மேவிய செல்வனை
நறவம்பூம்பொழில் நாவலூரன் வனப்பகையப்பன் சடையன்றன்

சிறுவன்வன்றொண்ட னூரன்பாடிய பாடல் பத்திவை வல்லவர்
அறவனாரடி சென்றுசேர்வதற் கியாதுமையுற வில்லையே.

நமச்சிவாயப் பதிகம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேன்இனிப்பிற வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.

கோணியபிறை சூடியைக்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப்பிஞ்ஞகப் பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரி வண்டறைகொன்றைத் தாரனைப்படப் பாம்பரை [மே.
நாணனைத்தொண்ட னூரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லை துன்ப

பொதிசோறு பெற்றது

இத்தனை யாம்ஆற்றை அறிந்திலே னெம்பெருமான்
பித்தரே யென்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்கம் முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

வளங்கனி பொழில்மல்கு வயலணிந் தழகாய
விளங்கொளி குருகாவூர் வெள்ளடை யுறைவானை
இளங்கிளை ஆரூரன் வனப்பகை யவளப்பன்
உளங்குளிர் தமிழ்மாலை பத்தர்கட் குறையாமே.

இறைவன் பிச்சையெடுத்தூட்டியது

முதுவாயோரி கதறமுதுகாட் டெரிகொண்டாடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீசூடும் மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையில் பலிநீகொள்ளக் கண்டா லடியார் கவலாரே
அதுவேயாமா றிதுவோகச்சூ ராலக் கோயி லம்மானே.

அன்னம் மன்னும் வயல்சூழ்கச்சூ ராலக்கோயி லம்மானை
உன்னமுன்னும் மனத்தாரூரன் ஆரூரன்பேர் முடிவைத்த [டன்
மன்னுபுலவன் வயல்நாவலர்கோன் செஞ்சொல்நாவன் வன்றொண்
பன்னுதமிழ்நூல் மாலைவல்லா ரவரெந் தலைமேற் பயில்வாரே.

கண் இழந்தபோது பாடியது

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன் அதுவும் நான் படப் பாலதொன் றானால், பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள் பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன், வழுக்கி வீழினுந்

திருப்பெய ரல்லால் மற்றுநான் அறியேன் மறுமாற்றம், ஒழுக்க என் கணுக் கொருமருந் துரையாய் ஒற்றி யூரெனும் ஊருறை வானே.

ஓதம் வந்துல வுங்கரை தன்மேல் ஒற்றி யூருறை செல்வனை நாளும், ஞாலந் தான்பர வப்படு கின்ற நான்மறை அங்கம் ஓதிய நாவன், சீலந் தான்பெரி தும்மிக வல்ல சிறுவன் வன்தொண்டன் ஊரனுரைத்த, பாடல் பத்திவை வல்லவர் தாம்போய்ப் பரகதி திண்ணம் நண்ணுவர் தாமே.

ஊன்றுகோல் பெற்றது

பிழையுளன பொறுத்திடுவ ரென்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயில் உளாயோஎன்ன
உழையுடையான் உள்ளிருந்(து) உளோம்போகீர் என்றானே.

மான்திகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றஅருள் செய்தளித்தா யென்றுரைக்க உலகெலாம்
ஈன்றவனே வெண்கோயி லிங்கிருந்தா யோவென்ன
ஊன்றுவதோர் கோலருளி யுளோம்போகீ ரென்றானே.

இடக்கண் பெற்றது

ஆலந் தான்உகந்(து) அமுதுசெய் தானை ஆதி யைஅம ரர்தொழு தேத்துஞ், சீலந் தான்பெரி தும்முடை யானைச் சிந்திப் பாரவர் சிந்தையு ளானை, ஏல வார்குழ லாளுமை நங்கை யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற, கால காலனைக் கம்பனெம் மானைக் காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

எள்க லின்றி யிமையவர் கோனை ஈச னைவழி பாடுசெய் வாள்போல், உள்ளத் துள்கி உகந்துமை நங்கை வழிப டச்சென்று நின்றவா கண்டு, வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி வெருவி யோடித் தழுவவெளிப் பட்ட, கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக் காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

வலக்கண் பெற்றது

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை கொத்தை யாக்கினீர்

எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே.

இழந்த பொற்றுவை பெற்றது

கொடுகுவெஞ்சிலை வடுகவேடுவர் விரவலாமை சொல்லித்
திடுகுமொட்டெனக் குத்திக் கூறைகொண்(டு) ஆறலைக்குமிடம்
முடுகுநாறிய வடுகர்வாழ்முருகன் பூண்டிமாநகர்வாய் [னிரே.
இடுகுநுண்ணிடை மங்கைதன்னொடும் எத்துக்கிங்கிருந் தீரெம்பிரா

முந்திவானவர் தாந்தொழும்முருகன் பூண்டிமாநகர்வாய்ப்
பந்தணைவிரற் பாவைதன்னையோர் பாகம் வைத்தவனைச்
சிந்தையிற்சிவ தொண்டனூரன் உரைத்தன பத்துங்கொண்(டு)
எந்தம் அடிகளை ஏத்துவாரிட ரொன்றுந்தாமிலரே.

முதலையுண்ட பாலனை வருவித்தது

எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெரு மானையே
உற்றாயென்(று) உன்னையே உள்குகின்றேனுணர்ந் துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி யூரவி நாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதி யேபர மேட்டி.

உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா ஆதியும் அந்தமு மாயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே.

ஐக்கியப் பதிகம்

தானெனை முன்படைத்தா னதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர்கொள்ள மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை யுத்தமனே.

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனாரென எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை யுத்தமனே.

ஊழிதோ றூழிமுற்றும் உயர்பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல வூரன்சொன்ன
ஏழிசை யின்தமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சையப்பர்க் கறிவிப்பதே.

திருச்சிற்றம்பலம்

# திருவாசகத் திரட்டு

திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

நாடகத்தா லுன்னடியார் போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் உடையானே.

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தாள் நின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாம்தீ வினையி னேற்கே.

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.

போற்றியோ நமச்சி வாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய சயசய போற்றி போற்றி.

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரான்என்னைத் தாங்கிக்கொள்ளே.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக வொப்புவித்த உள்ளத்தா ருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்.

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்களப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தோறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருப்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ.

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்.

பிரமன் அரியென் றிருவருந்தம் பேதைமையால்
பரமம் யாம்பரம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழலுருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ.

ஏதமினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை
ஆதிகுண மொன்று மில்லான் அந்தமிலான் வரக்கூவாய்.

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந்துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள்இருக்கும் அருளைப்புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி இனித்தான் நல்காயே.

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில்கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே.

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லை கண்டேனே.

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமுங்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர்இடையூ றெனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே.

காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டான்எங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

திருச்சிற்றம்பலம்

# திருவிசைப்பாத் திரட்டு

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே, தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே சித்தத்துள் தித்திக்குந் தேனே, அளிவள ருள்ளத் தானந்தக் கனியே அம்பலம் ஆடரங் காக, வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத் திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங் குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

திருச்சிற்றம்பலம்

---

# திருப்பல்லாண்டுத் திரட்டு

திருச்சிற்றம்பலம்

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின், கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து, அண்டங் கடந்த பொருள்அள வில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள், பண்டும் இன்றும்என்றும் உள்ளபொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி எங்குங்குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மமிகு திருவாரூரின்
மழவிடை யாற்கு வழிவழியாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

---

# திருமந்திரத் திரட்டு

திருச்சிற்றம்பலம்

சிவனொ டொக்குந் தெய்வந் தேடினும் இல்லை
அவனொ டொப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி யாணையே.

திருச்சிற்றம்பலம்

## பதினொராந்திருமுறைத் திரட்டு

திருச்சிற்றம்பலம்

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்ருன் தானே—அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்.

சிந்தனை செய்ய மனம்அமைத்தேன் செப்ப நாஅமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத் தேன்கை தொழஅமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத் தேன்மெய் அரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி யீசற் கிவையான் விதித்தனவே.

பெறுகின்ற எண்ணிலி தாயரும் பேறும் யானும்என்னை
உறுகின்ற துன்பங்க ளாயிர கோடியும் ஓய்வொடுஞ்சென்
றிறுகின்ற நாள்களு மாகிக் கிடந்த இடுக்கண்எல்லாம்
அறுகின் றனதில்லை ஆளுடை யான்செம்பொன் அம்பலத்தே.

வருவா சகத்தினில் முற்றுணர்ந் தோனைவண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண் டேயுமற் றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே.

திருச்சிற்றம்பலம்

# பெரிய புராணத் திரட்டு

திருச்சிற்றம்பலம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரியஆ தரித்தாள்
பெண்ணின் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து.

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனஇடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும் இனிஎதிர் காலத்தின் சிறப்பும், இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால் எற்றைக்குந் திருவரு ளுடையேம், நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்ந்து, வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம் என்பார்.

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

### சிவபெருமான் சந்நிதானத்தில் திருநந்திதேவர்
### விண்ணப்பஞ் செய்தருளிய

# பதினாறு பேறு

1. மறைக ணிந்தனை சைவசிந் தனைபொரு மனமும்[1]
தறுக ணைம்புலன் களுக்கேவல் செய்யுறாச் சதுரும்[2]
பிறவி தீதெனப் பேதையர் தம்மொடு பிணக்கும்[3]
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோ டுறவும்[4]

2. யாது நல்லன்பர் கேட்கினு முதவுறு மியல்பும்[5]
மாத வத்தினோ ரொறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்[6]
ஓது நல்லுப தேசமெய் யுறுதியு[7] மன்பர்
தீது செய்யினுஞ் சிவச்செய லெனக்கொளுந் தெளிவும்[8]

3. மனமும் வாக்குநின் னன்பர்பா லொருப்படு செயலும்[9]
கனவி லும்உன தன்பருக் கடிமையாங் கருத்தும்[10]
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்[11]
புனித நின்புகழ் நாடொறு முரைத்திடும் பொலிவும்[12]

4. தீமை யாம்புறச் சமயங்க ளொழித்திடுந் திறனும்[13]
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்[14]
ஏழு றும்பர தாரநச் சிடாதநன் னோன்பும்[15]
தூய்மை நெஞ்சின்யா னெனதெனுஞ் செருக்குறாத் துறவும்[16]

5. துறக்கமீ துறையினு நரகிற் றோய்கினும்
இறக்கினும் பிறக்கினு மின்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெருமவிவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்.

6. துதிவாணி[1] வீரம்[2] விசயம்[3] சந்தானம்[4] துணிவு[5] தனம்[6]
மதி[7] தானியம்[8] சவுபாக்கியம்[9] போகம்[10] அறி[11] வழகு[12]
புதிதாம் பெருமை[13] யறங்[14] குல[15] நோயகல் பூண்வயது[16]
பதினாறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே.

—திருவையாற்றுப் புராணம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்டான் செம்மலர் நோன்றாள் விரைகழல்
வெல்க; வாழ்க உலகெலாம்.

# தருமபுர ஆதீன வெளியீடுகள்

| | | | வெளியிடப்பட்ட வருஷம் |
|---|---|---|---|
| 1. | குருஞானசம்பந்த சுவாமிகள் தாலாட்டு | ... | 1924 |
| 2. | நித்திய கன்மநெறி | ... | 1927 |
| 3. | திருமுல்லைவாயிற் புராணம் | ... | 1927 |
| 4. | திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் | ... | 1927 |
| 5. | சித்தாந்த நிச்சயம் | ... | 1928 |
| 6. | சம்பிரதாய தீபம் | ... | 1928 |
| 7. | வருணாஸ்ரம சந்திரிகை | ... | 1930 |
| 8. | சிகாரத்தினமாலை | ... | 1930 |
| 9. | திருப்பதிகமும் பஞ்சரத்தினமும் | ... | 1930 |
| 10. | தசமணிமாலை | ... | 1930 |
| 11. | ஞானசம்பந்த குருராய வட்டகமும், சந்திரகலாமாலையும் | ... | 1930 |
| 12. | திருவையாற்றுப் புராணம் | ... | 1930 |
| 13. | சிவானந்தபோதசாரம் | ... | 1931 |
| 14. | சோடசகலாப் பிரசாத சட்கம் | ... | 1931 |
| 15. | சைவசன்யாச பத்ததி | ... | 1932 |
| 16. | சிவபோகசாரம் | ... | 1932 |
| | ஷெ இரண்டாம் பதிப்பு | ... | 1936 |
| 17. | சிவப்பிரகாச கட்டளை | ... | 1932 |
| | ஷெ இரண்டாம் பதிப்பு | ... | 1939 |
| 18. | தோத்திரப் பாடற்றிரட்டு | ... | 1933 |
| 19. | திருத்துருத்திப் புராணம் | ... | 1933 |
| 20. | ஞானசரிதை | ... | 1934 |
| 21. | முத்தி நிச்சயம் | ... | 1934 |
| 22. | அறிவானந்த சமுத்திரம் | ... | 1935 |
| 23. | பண்டார மும்மணிக்கோவை | ... | 1937 |
| 24. | இந்துமத பாலபாடம் | ... | 1937 |
| 25. | சிதம்பர செய்யுட்கோவை | ... | 1937 |
| 26. | திருவையாற்றுத் தலமகிமைச் சுருக்கம் | ... | 1937 |
| 27. | கிளிவிடு தூது | ... | 1938 |
| 28. | திருமுலைப்பால் சிறப்பு | ... | 1939 |
| | ஷெ இரண்டாம் பதிப்பு | ... | 1941 |
| 29. | பதிபசுபாசத் தொகை | ... | 1940 |
| 30. | சிவஞான தேசிகர் நான்மணிமாலை | ... | 1940 |
| 31. | திருபுவனத் தலமகிமைச் சுருக்கம் | ... | 1940 |
| 32. | கீர்த்தித் திருவகவல் - மாணிக்கவாசக சுவாமிகள் | ... | 1941 |
| 33. | ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளின் வரலாறும் சில பாசுரங்களும் | ... | 1941 |
| 34. | வைத்தீஸ்வரன் கோவில், தேவாரம் திருப்புகழ் | ... | 1941 |
| 35. | திருத்தொண்டத்தொகையும், அசபாநடன பதிகமும் | ... | 1941 |
| 36. | குங்கிலியக்கலய நாயனார் அன்பின் திறம் | ... | 1941 |
| 37. | திருக்கடவூர் தேவாரம், திருப்புகழ் | ... | 1941 |
| 38. | திருவையாற்றுத் தேவாரங்கள் | ... | 1941 |
| 39. | புள்ளிருக்கு வேளூர்ப் புராணம் | ... | 1941 |
| 40. | சித்தாந்த சைவ வினா விடை | ... | 1941 |
| 41. | நால்வர் சரித்திரமும் அற்புதத் தேவாரத் திரட்டும் | ... | 1941 |